# ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

**பாடம் 2**

## தேவனுடைய ராஜ்யம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ........ 1**

**பரந்த மற்றும் குறுகிய விதங்கள் ........ 2**

**மாறாத ஆட்சி** ........ 3

**வளரக்கூடியதுமானது** ........ 5

**ஆதி கால வரலாறு ........ 11**

**இடம்** ........ 12

ஆரம்ப ஆயத்தங்கள் ........ 12

நடந்துகொண்டிருக்கும் விரிவாக்கம் ........ 15

**மக்கள்** ........ 17

ஆசாரியர்கள் ........ 18

துணைப் பிரதிநிதிகள் ........ 20

**வளர்ச்சி** ........ 22

பிரபஞ்ச துரோகம் ........ 23

ஊழல் மற்றும் நியாயத்தீர்ப்பு ........ 24

நீண்ட கால **யுக்தி** ........ 25

**இஸ்ரவேல் தேசம் ........ 28**

**இடம்** ........ 28

அசல் மையம் ........ 30

விரிவடைதல் ........ 31

**மக்கள்** ........ 33

இஸ்ரவேலை தேர்ந்தெடுத்தல் ........ 33

ஆசாரியர்களின் ராஜ்யம் ........ 34

ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள் ........ 35

**வளர்ச்சி** ........ 36

வாக்குத்தத்தம் ........ 36

யாத்திராகமம் மற்றும் கானானை சுதந்தரித்தல் ........ 38

பேரரசு ........ 40

**புதிய ஏற்பாடு ........ 44**

**இடம்** ........ 45

மையம் ........ 46

விரிவடைதல் ........ 49

**மக்கள்** ........ 49

கிறிஸ்து ........ 50

விசுவாசிகள் ........ 53





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**முன்னேற்றம்** .......... 55
**முடிவுரை** .......... **58**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

விவரங்கள் அதிகமாக இருக்கும்போது அவைகளில் முக்கியமானவைகளை தவறவிடும் ஒருவரை விவரிக்க ஆங்கிலத்தில் ஒரு சொற்பயன்பாடு உள்ளது. அப்படிப்பட்ட ஒருவரை "அவர் இருக்கிற சூழ்நிலையை பார்க்க முடியாதவர்" என்று நாம் அடிக்கடி சொல்வோம். அநேக கலாச்சாரங்களில் ஒரே மாதிரியான சொற்பயன்பாடுகள் உள்ளன, எனவே நாம் எதை எவ்வாறு அர்த்தப்படுத்துகிறோம் என்பதைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. ஒரு காரியத்தின் சிறு பகுதியிலுள்ள நுணுக்கங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில், அத்தகைய சிறு பகுதிகள் சேர்ந்து எப்படி அந்த பெரிய காரியம் உருவாகிறது என பார்க்கத் தவறுவது எளிது. எனவே, இது போன்ற பல சிக்கலான மற்றும் குழப்பமான சூழ்நிலைகளில், நாம் அடிக்கடி ஒருவருக்கொருவர் பின் நோக்கி சென்று பெரிய சித்திரத்தைப் பார்க்கவும் நினைவூட்டுகிறோம்.

நாம் பழைய ஏற்பாட்டை அணுகும்போது இந்த ஆலோசனையை மனதில் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டின் விவரங்கள் மிகவும் சிக்கலானவை, அதன் பல பெயர்கள், இடங்கள், நிகழ்வுகள், இறையியல் போதனைகள் மற்றும் தார்மீக அறிவுறுத்தல்களை தவற விடுவது எளிது. பழைய ஏற்பாட்டின் அடித்தளத்தில் உள்ள ஒற்றுமையை நாம் மறந்துவிடுகிறோம். இந்தச் சிக்கலைச் சமாளிக்க, நாம் பின்வாங்கி, பழைய ஏற்பாடு அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் ஒரு பெரிய படத்தைப் பெற வேண்டும்.

இது ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டின் நூற்தொகுப்பு என்கிற நம் தொடரின் இரண்டாவது பாடமாகும். இந்தப் பாடத்திற்கு "தேவனுடைய ராஜ்யம்" என்ற தலைப்பை வைத்துள்ளோம். பண்டைய இஸ்ரவேலின் விசுவாசத்திற்கு தேவனுடைய ராஜ்யம் அடிப்படையாக இருந்தது. எனவே, ராஜ்யத்தைப் பற்றிய சரியான புரிதல், பழைய ஏற்பாட்டில் நாம் கொண்டிருக்க வேண்டிய மிக விரிவான மற்றும் ஒன்றிணைக்கும் முன்னோக்குகளில் ஒன்றை வழங்குகிறது.

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்பது வேதத்தை நன்கு அறிந்த அனைவருக்கும் தெரியும். அவை பல நடைகளில் வெவ்வேறு காரியங்களைப் பற்றி எழுதப்பட்டன மற்றும் பல்வேறு காலங்களிலும் சூழ்நிலைகளிலும் தேவனுடைய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தன. இருந்தாலும், இந்த புத்தகங்களின் எழுத்தாளர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எப்போதும் அவர்கள் பொதுவாகக் கொண்டிருந்த அடிப்படைக் கண்ணோட்டங்களிலிருந்து எழுதினர். அனைத்து பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் தேவன் தனது மக்களுடன் தொடர்ச்சியான முக்கிய உடன்படிக்கைகளை நிறுவினார் என்று விசுவாசித்தனர். இந்த உடன்படிக்கைகள் அனைத்தும் ஒரு முக்கிய நோக்கத்தை நிறைவேற்ற வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் விசுவாசித்தனர் - அதாவது பூமியின் கடையாந்தரங்களுக்கு தேவனுடைய ராஜ்யம் பரவும் படியாக அதை நிர்வகித்தல்.

இந்தப் பாடம், தேவனுடைய ராஜ்யத்தை மேம்படுத்துவதற்கான இஸ்ரேலின் ஒன்றிணைக்கும், அடித்தளமான அர்ப்பணிப்பின் நான்கு பரிமாணங்களைத் தொடும். முதலில், தேவனுடைய ராஜ்யம் அல்லது ஆட்சியைப் பற்றி வேதாகமம் எவ்வாறு பரந்த மற்றும் குறுகிய விதங்களில் பேசுகிறது என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, பூமியின் வரலாற்றின் ஆரம்ப கட்டங்களான ஆதிகால வரலாற்றின் போது தேவனுடைய ராஜ்யம் எப்படி இருந்தது என்பதைப் பற்றிப் பார்ப்போம். மூன்றாவதாக, இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றில் தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியை ஆராய்வோம். நான்காவதாக, தேவனுடைய ராஜ்யம் பற்றிய பழைய ஏற்பாட்டுக் கருத்து புதிய ஏற்பாட்டு யுகத்தில் எவ்வாறு நிறைவேறுகிறது என்பதைப் பார்ப்போம். பழைய ஏற்பாடு தேவனுடைய ஆட்சியைப் பற்றி பரந்த மற்றும் குறுகிய விதங்களில் பேசும் விதத்தை முதலில் பார்ப்போம்.

# பரந்த மற்றும் குறுகிய விதங்கள்

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள், ஏனென்றால் அது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு, மாற்கு மற்றும் லூக்காவின் சுவிசேஷங்களில் மட்டும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய 60 க்கும் மேற்பட்ட குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தப் பாடத்தில், தேவனுடைய ராஜ்யத்தின் மீதான இந்தப் புதிய ஏற்பாட்டு முக்கியத்துவம் பழைய ஏற்பாட்டில் எவ்வாறு வேரூன்றியுள்ளது என்பதைப் பார்ப்போம். ராஜ்யங்கள் மற்றும் பேரரசுகள், ராஜாக்கள் மற்றும் பேரரசர்கள் பண்டைய இஸ்ரவேலர்களின் அனுபவத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் வேதாகம எழுத்தாளர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் வெளிப்படையான மற்றும் சுருக்கமான விளக்கத்தை வழங்க வேண்டிய அவசியத்தை உணரவில்லை. ஆனால் இந்த உண்மை இன்று உங்களுக்கும் எனக்கும் ஒரு பெரிய பிரச்சனையை எழுப்புகிறது. பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகத்திற்க்கும் நமக்கும் தூரம் அதிகமாக இருப்பதால், பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பக்கத்தின் மேற்பரப்பிற்கும் கீழே உள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய ராஜ்யத்தின் அடிப்படைக் கருத்தை சுருக்கமாகக் கூறுவதன் மூலம் தொடங்க வேண்டும்.

பழைய ஏற்பாடு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி எவ்வாறு பேசுகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல பல வழிகள் உள்ளன, ஆனால் நாம் அதில் இரண்டு திசைகளில் மட்டும் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, பரந்த பொருளில், தேவனுடைய ஆட்சி முழுமையானதும் மாறாததுமாயிருக்கிறது என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, ஒரு குறுகிய அர்த்தத்தில், தேவனுடைய ஆட்சி முழுமையற்றதும் வரலாறு முழுவதும் வளர்ந்து வருகிறதுமாய் இருக்கிறது என்பதையும் பார்ப்போம். தேவனுடைய முழுமையான மற்றும் மாறாத ஆட்சியை முதலில் கருத்தில் கொள்வோம்.

## மாறாத ஆட்சி

சங்கீதம் 93:1-2 இல், சிருஷ்டிகரான தேவனை துதிப்பதை நாம் காண்கிறோம்:

> கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்துகொண்டிருக்கிறார்; கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார். ஆதலால் பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது. உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்.

நாம் இங்கே பார்ப்பது போல், தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்து பராமரிக்கிறார் என்ற உண்மை சங்கீதக்காரனை "கர்த்தர் ராஜரிகம் பண்ணுகீறார்" என்று அறிவிக்க வழிவகுத்தது. அவர் அனைத்து சிருஷ்டிகளுக்கும் மேலான ராஜா. மீண்டும் மீண்டும், பழைய ஏற்பாடு இந்த அடிப்படை நம்பிக்கையை அழுத்தமாகச் சொல்கிறது. தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்து பராமரிக்கிறார், மேலும் அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர். இந்த பரந்த அர்த்தத்தில், அவரது ஆட்சி அல்லது ராஜ்யம் உலகளாவியதாகவும் மாறாததாகவும் இருக்கிறது.

சிருஷ்டிகராகவும் பராமரிப்பாளராகவும் இருக்கிற தேவனின் மாறாத, உலகளாவிய ஆட்சியின் மீதான இந்த நம்பிக்கை, பண்டைய இஸ்ரவேலர்களின் நம்பிக்கைக்கும் அவர்களைச் சுற்றியிருந்த நாடுகளின் மதங்களுக்கும் இடையிலான மிகவும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளில் ஒன்றாகும். பல்வேறு தேவர்கள் சர்வாதிகாரத்திற்காக போட்டியிடுவதாகவும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்த தேவர்களின் சக்தி குறையும் மற்றும் அதிகரிக்கும் என்று அண்டை மதங்கள் கற்பித்தன. சில சந்தர்ப்பங்களில், பருவங்களின் வருடாந்திர சுழற்சிகளுக்கு ஏற்ப தேவர்கள் அதிகார நிலைகளில் உயர்வதும் வீழ்ச்சியடைவதும் வழக்கம் என்று கருதப்பட்டது. மற்ற

சந்தர்ப்பங்களில், அவர்களின் விருப்பமான நாடுகள் போரில் வெற்றிகளையும் தோல்விகளையும் அனுபவித்த போது, தேவர்கள் பரலோக அதிகார பதவிகளில் இருந்து உயரவும் வீழ்ச்சியடையவும் செய்வார்கள் என்று நம்பப்பட்டது.

ஆனால் அத்தகைய கருத்துக்களை வேதாகமம் ஆதரிக்கவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய யேகோவா, அனைத்தையும் சிருஷ்டித்தவர் மற்றும் பராமரிப்பவர், முழு சிருஷ்டிப்பின் மீதும் அசைக்க முடியாத ஆட்சியாளராக இருப்பவர் - வல்லமை வாய்ந்த ஆவிகள் அல்லது "தேவர்கள்" என்று அழைக்கப்படுபவர்களையும் அவர் ஆட்சி செய்கிறார். இயற்கையின் ஒவ்வொரு சுழற்சியிலும், போரில் ஏற்படுகிற தோல்வியிலும் வெற்றியிலும், தேவனுடைய அரசாட்சி உலகளாவியதாகவும் மாறாததாகவும் இருக்கிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், அனைத்து சிருஷ்டிகளும் அவருடைய ராஜ்யமாக எப்பொழுதும் இருந்திருக்கின்றன, எப்பொழுதும் இருக்கவும் செய்யும்.

> எனவே, தேவன் எல்லாவற்றின் மீதும் ராஜாவாக இருக்கிறார். சிருஷ்டிப்பில் உள்ள அனைத்தும் அவருக்கு எவ்வாறு கீழ்ப்படிகின்றன என்பதை நீங்கள் ஆதியாகமம் 1 இல் பார்க்கிறீர்கள். சங்கீதம் 24 "பூமியும் அதிலுள்ள யாவும் கர்த்தருடையது" என்று சொல்லுகிறது, ஏனென்றால் அவர் அதைப் படைத்தார். "யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்!" அவர் எல்லாவற்றிற்கும் ராஜா என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அனைத்தும் அவருடையதே, அது மாறவே மாறாது... நீங்கள் வேதாகமத்தை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை பார்த்தால், சிருஷ்டிப்பு, மனிதகுலம், எல்லாவற்றின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் தேவன் சர்வாதிகாரியாக இருக்கிறார் என்பதை உங்களால் காண முடியும்.
>
> – Dr. ஜோனதான் டி. ஒர்த்திங்டன்

> தேவன் முற்றிலும் சர்வாதிகாரமுடையவர், என்பது அர்மினியர்களும் கால்வினிஸ்டுகளும் கொண்டிருக்கும் நிலையாகும். அது வேதத்தில் முற்றிலும் தெளிவாகவுள்ள ஒரு நிலைப்பாடாகும்; தேவன் முற்றிலும் சர்வாதிகாரமுள்ளவர், நாம் அவருடைய சித்தத்தை எல்லா நேரங்களிலும் பின்பற்றுகிறோம், நம்முடைய தேர்வு அவருடைய சித்தத்தை மாற்றாது. நமது தேர்வு அவருடைய சர்வாதிகாரத்துவத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும்.
>
> – Dr. கிரேன்ட் ஆர். ஆஸ்பார்ன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், பரந்த அர்த்தத்தில், சிருஷ்டிப்பின் மீதான தேவனுடைய ஆட்சி முழுமையானதும் மாறாததுமாய் இருக்கிறது என்று நம்பியது போல, அவர்கள் தேவனுடைய ராஜ்யம் அல்லது ஆட்சி முழுமையடையாததும் வரலாற்றில் வளரக்கூடியதுமாயிருக்கிறது என்று இரண்டாவது குறுகிய அர்த்தத்தைப் பற்றியும் பேசினர்.

## வளரக்கூடியதுமானது

தேவனுடைய ராஜ்யம் வளர்ச்சியடைகிறது என்று வேதவசனங்கள் பேசும்போது, காலப்போக்கில் தேவன் எவ்வாறு தனது அசைக்க முடியாத சர்வாதிகாரத்துவத்தை வெளிப்படுத்துகிறார் என்பதில் கவனம் செலுத்துகின்றன. மனித ராஜாக்கள் தங்கள் தேசங்களின் மீது உச்சகட்ட கட்டுப்பாடற்ற அதிகாரம் கொண்ட ஒரு ராஜ்யத்தில் இப்போதுள்ள பெரும்பாலான நவீன கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததில்லை. எனவே வேதாகமத்தில் இந்த கருப்பொருள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அடிக்கடி பார்க்கத் தவறிவிடுகிறோம். வரலாற்றில் தேவன் தனது அரசாட்சியை வெளிப்படுத்துவதைக் குறிப்பிட, பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இன்று நாம் அடையாளம் காண முடியாத தெய்வீக மற்றும் மனித அரசர்களின் பொதுவான சித்தரிப்புகளைப் பயன்படுத்தினர். உதாரணமாக, அவர்கள் தேவனை ராஜ கட்டிடக்கலைஞராகவும் கட்டிடம் கட்டுபவராகவும், அவருடைய மக்களின் ராஜ தந்தையாகவும், சட்டத்தை வழங்குபவராகவும் உடன்படிக்கை செய்பவராகவும் சித்தரித்தனர். அவர்கள் தேவனை ஒரு அரச போர்வீரராகவும், ஒரு கணவராகவும் ஒரு மேய்ப்பராகவும் வர்ணித்தனர்.

ராஜாக்கள் மற்றும் ராஜ்யங்களை சம்பந்தமாற்றது என்றும் வெறுக்கத்தக்க அரசியல் அமைப்புகள் என்றும் நவீன மக்கள் பெரும்பாலும் நினைக்கிறார்கள். ஆனால் தேவனுடைய வரலாற்று ராஜ்யம் பூமிக்கு வருவதைப் பற்றியதான வேதாகம கருப்பொருள் வளமானதும் அற்புதமான கற்பனையுமாய் இருக்கிறது. சிருஷ்டிப்புகள் அனைத்தின் மீதும் நிகரற்ற சர்வாதிகாரம் கொண்ட தேவனுடைய அற்புதத்தை இது வெளிப்படுத்துகிறது மேலும் இது பூமியில் அவருடைய ராஜ்யத்தை நமது புகழ்பெற்ற இலட்சியமாக வெளிப்படுத்துகிறது.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதும், தேவன் தனது பரலோக சிங்காசனத்திலிருந்து அரச கட்டளைகளை வெளியிட்டார். தகப்பன் தன் குழந்தைகளை நேசிப்பது போல அவர் தன் ராஜ்ய மக்களை நேசித்தார். அவர் தனது தூதர்களையும் மனித படைகளையும் செயல் புரிவதற்கு அழைத்தார். அவர் தனது விருப்ப தேசமான இஸ்ரவேல் உட்பட பிற நாடுகளை நிறுவி தோற்கடித்தபோது அவர் ராஜாவாக செயல்பட்டார். தேவனுடைய ஆட்சியின் இந்த வரலாற்று வெளிப்பாடுகளின் மகத்தான குறிக்கோள், தேவன் ராஜா என்பதை எல்லா இடங்களிலும் உள்ள ஒவ்வொரு உயிரினமும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒப்புக்கொள்வதாகும். இறுதியில், முழு சிருஷ்டிப்பும் ஒவ்வொரு கோத்திரம் மற்றும் தேசத்திலிருக்கிற தேவனுடைய மக்களுக்கு அன்பு, மகிழ்ச்சி, நன்மை, நீதி, சுகம் மற்றும் சமாதானம் ஆகியவற்றின் இடமாக இருக்கும். தேவன் தம்முடைய காணக்கூடிய மகிமையால் பூமியை நிரப்புவார், மேலும் அவர் யார், அவர் என்ன செய்தார் என்பதற்காக முடிவில்லாத போற்றுதலைப் பெறுவார்.

இந்த பழைய ஏற்பாட்டின் கருப்பொருளை அறிமுகப்படுத்த ஒரு எளிய வழி, "கர்த்தருடைய ஜெபத்தின்" தொடக்க வார்த்தைகளுக்கு திரும்புவதாகும். மத்தேயு 6:9-10 இல், இயேசு தம் சீஷர்களுக்கு இவ்வாறு ஜெபிக்கும்படி கற்பித்தபோது, தேவனுடைய வளரும் ராஜ்யத்தைப் பற்றிய பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டங்களை சுருக்கமாகக் கூறினார்:

> பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத்தேயு 6:9-10).

"உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கும்படி இயேசு நமக்குக் கற்பித்தபோது, ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு எழுத்தாளரும் பார்க்க விரும்புவதை அவர் வெளிப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் ராஜ்யத்தின் வருகையைப் பற்றி பேசுவது மிகவும் பொதுவானது, ஆனால் இந்த கிறிஸ்தவ நம்பிக்கை பழைய ஏற்பாட்டில் எவ்வாறு வேரூன்றியுள்ளது என்பதை நாம் அடிக்கடி உணரவில்லை. எனவே, ராஜ்யத்தின் வருகைக்காக ஜெபிக்கும்படி இயேசு நமக்குக் கற்பித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டும்.

> இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கும்போது, சங்கீதக்காரரின் முழுத் தொகுப்பிலிருந்தும் எடுத்து, உண்மையுள்ள ஜெபத்தின் இந்த அடிப்படையான உருவரைக் குறிப்பை எடுத்துக்காட்டுகிறார். ஆனால் ஜெபம்: "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதிலிருந்து தொடங்குகிறது. தேவனுடைய தந்தைக்குணம் அவரது ராஜ குடும்பத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளதை இயேசுவும் கூட கூறுகிறார் என்பதை நாம் கவனிக்கலாம். தேவன் ஒரு தந்தை மட்டுமல்ல, அவர் ஒரு ராஜ தந்தை ஆவார். எனவே, உண்மையுள்ள மகனாக, நீங்கள் உங்கள் தந்தையின் முன் வரும்போது, அவருடைய ராஜ்யம் விரிவடைய விரும்புகிறீர்கள். மனித



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அவருடைய ஆட்சியைக் கொண்டுவருவதை நீங்கள் காண விரும்புகிறீர்கள்.
>
> – Dr. ஸ்காட் ரெட்

பண்டைய எபிரெய கவிதைகளின் வழக்கத்தைப் பின்பற்றி, தேவனுடைய ராஜ்யம் வருவதற்காக ஜெபிக்கும்படி இயேசு நமக்குக் கற்பித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை விளக்கினார். முதலாவதாக, இயேசு தேவனை “பரலோகத்திலுள்ள பிதா” என்று பேசினார், பரலோக சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ராஜ பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுகிறார். தேவனுடைய நாமம் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று ஜெபிக்க அவர் நமக்குக் கற்றுக் கொடுத்தார் - ”உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.” இந்தவிண்ணப்பத்தை விவரித்த அவர், தேவனுடைய ராஜ்யம் வரும்போது அவருடைய நாமம் பரிசுத்தமாக வைக்கப்படும் என்பதை ஒப்புக்கொண்டார். பின்னர், தேவனுடைய ராஜ்யத்தின் வருகையின் அர்த்தம் என்ன என்பதை விளக்குவதற்கு, அவருடைய சித்தம் நிறைவேறும்போது தேவனுடைய ராஜ்யம் அல்லது ஆட்சி முழுமையாக வரும் என்று இயேசு மேலும் கூறினார். ஆனால், அவருடைய சித்தம் “பரலோகத்தில் உள்ளது போல் பூமியிலும்” செய்யப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார் என்பதை கவனியுங்கள். இன்று பல கிறிஸ்தவர்கள் நம்புவதைப் போலல்லாமல், தேவனுடைய மக்கள் பரலோகத்தில் தேவனுடன் நித்தியத்தை செலவிடுவதே வரலாற்றின் குறிக்கோள் என்று இயேசு கற்பிக்கவில்லை. மாறாக, பரலோகத்தின் சிங்காசன அறையில் தேவனுடைய சித்தம் ஏற்கனவே செய்யப்படுவதைப் போலவே பூமியிலும் செய்யப்படுவதே வரலாற்றின் குறிக்கோள் என்று இயேசு கற்பித்தார்.

> தேவன் எல்லாவற்றையும் புதுப்பிக்கும் ஒரு நாள் வரும் என்பது நம்முடைய உறுதியான நம்பிக்கை...இயேசு குறிப்பாக, அவருடைய சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்த அழகான வார்த்தைகளில் இதை நாம் பார்க்க முடியும், ”பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல போல பூமியிலும் செய்யப்படுவதாக.” அந்த முக்கியமான, மைய, அடிப்படையான கிறிஸ்தவ யோசனை என்னவென்றால், பரலோக உண்மைகள் பூமிக்குரிய உண்மைகளாக மாறும் வரை காத்திருக்கும் ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம், தேவன் பரிசுத்தப்படுத்தப்படும் போது பரலோகத்தில் நடக்கும் விதம் எல்லாம் சரியாகவும், நீதியும் மகிமையும் உண்மையும் அன்பும் ஆட்சி செய்யும் விதத்திலும்

> இருக்கும்; கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நம்பிக்கை, நம்முடைய உறுதியான நம்பிக்கை, பரலோகத்தில் நடப்பதைப் போன்று பூமியில் நடக்க வேண்டும் என்பதே நம்முடைய எதிர்பார்ப்பாகும். இதுவே புதிய சிருஷ்டி, நமது நித்திய வீடு என்கிற நம்பிக்கையை வேதம் உறுதியளிக்கிறது.
>
> – Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

பூமி எப்படி பரலோகத்தைப் போல மாறும் என்று இயேசு எதிர்பார்த்தார் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள, தானியேல் 7:9-10 யைக் கவனியுங்கள். தேவனுடைய பரலோக சிங்காசன அறையின் பொதுவான பழைய ஏற்பாட்டு உருவப்படத்தை இங்கே காணலாம்:

> சிங்காசனங்கள் வைக்கப்பட்டன, மற்றும் நீண்ட ஆயுசுள்ளவர் அவரது இருக்கையில் அமர்ந்தார்; அவருடைய ஆடை பனிபோல் வெண்மையாகவும், அவருடைய தலைமுடி தூய கம்பளி போலவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையாக இருந்தது; அதன் சக்கரங்கள் எரிந்து கொண்டிருந்தன. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள் (தானியேல் 7:9-10).

பரலோகத்தின் இந்த உருவப்படம் வழக்கத்திற்கு மாறானது அல்ல. தேவனுடைய பரலோக சிங்காசன அறையைப் பற்றிய இதே போன்ற விளக்கங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் காணப்படுகின்றன. ஆனால் தானியேலின் பார்வையில் உள்ள இரண்டு பரிமாணங்களை நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஒருபுறம், தேவன் தம்முடைய பரலோக சிங்காசன அறையில் சிருஷ்டிகளுக்கு முன்பாக அவருடைய காணக்கூடிய, மகிமையான பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். வேதம் கற்பிப்பது போல், தேவன் எங்கும் நிறைந்தவர் – அவர் எங்கும் இருக்கிறார். அவர் விண்வெளியின் அனைத்து பரந்த விண்மீன் திரள்களிலும், நமது சிறிய கிரகத்திலும், பசுமையான காடுகளிலும், வறண்ட பாலைவனங்களிலும், ஒவ்வொரு சிறிய கிராமத்திலும், ஒவ்வொரு பெரிய நகரத்திலும் இருக்கிறார். அவர் எங்கும் நிறைந்திருந்தாலும், அவர் பெரும்பாலும் கண்ணுக்கு தெரியாதவராகவே இருக்கிறார். அப்படியிருந்தும், தானியேலின் தரிசனமும் பல வேத வசனங்களும் நமக்குச் சொல்வது போல், தேவனுடைய பிரசன்னத்தை பரலோகத்தின் சிங்காசன அறையில் உள்ள ஒவ்வொரு சிருஷ்டியும் காண முடியும். தேவன் தனது சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார், ஒளிரும் வெள்ளை ஆடைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அணிந்து, கம்பளி போன்ற வெள்ளை முடியுடன் இருக்கிறார். அவருடைய சிங்காசனம் அக்கினியினால் கொழுந்து விட்டு எரி கிறது, அவருடைய சிங்காசனத்திலிருந்து பட்சிக்கிற அக்கினி பாய்கிறது.

பரலோகத்தின் இந்த உருவப்படம், பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையில் இயேசுவின் ஜெபம் வெளிப்படுத்துகிற வேறுபாட்டின் ஒரு பரிமாணமாகும். ஆம், தேவனுடைய மகிமை சிருஷ்டிப்பின் அற்புதங்களில் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். வேதாகம வரலாற்றில், தேவனுடைய மகிமை சில நேரங்களில் பூமியில் காணும்படியாக இருந்தது. ஆனால் தேவனுடைய மகிமையின் இந்தக் காட்சிகளை அவருடைய பரலோக சிங்காசன அறையில் தேவனுடைய அபரிமிதமான மகிமையுடன் ஒப்பிடுவது அரிதான காரியம். எனவே, தேவனுடைய ராஜ்யம் பரலோகத்தில் இருப்பதைப் போல பூமிக்கு வருவதற்காக ஜெபிக்க இயேசு நம்மை அழைத்தபோது, அது ஏற்கனவே பரலோகத்தை நிரப்புவதால் பூமியை நிரப்ப தேவனுடைய காணக்கூடிய மகிமையின் அபரிமிதமான பிரகாசத்திற்காக ஜெபிக்குமாறு அவர் நம்மை அழைத்தார். கிறிஸ்து திரும்பி வரும்போது பூமிக்கு இறங்கும் புதிய எருசலேமின் மகிமையை விவரித்தபோது, அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தின விசேஷம் 21:23-ல் மனதில் வைத்திருந்தது இதுதான். யோவானின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு (வெளிப்படுத்தின விசேஷம் 21:23).

பரலோகத்தில் இருப்பதுபோல தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வரவேண்டுமென்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்பித்தபோது, அவருடைய மகிமையான, ராஜ மகிமையால் பூமியை நிரப்புவதற்கு நாம் ஏங்கவும் ஜெபிக்கவும் வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்தினார்.

மறுபுறம், பரலோகத்தைப் பற்றிய தானியேலின் தரிசனமும் தேவனுடைய அழகான, மகிமையான பிரசன்னத்தை அங்கே இருக்கும் சிருஷ்டிகளின் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்துகிறது. தானியேல் 7:10 இல் நாம் வாசிக்கிறபடி:

> அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள் (தானியேல் 7:10).

பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக எண்ணற்ற சிருஷ்டிகள் அவரைக் கவனித்து, அவரை வணங்கி, தாழ்மையுடன் அவருடைய கட்டளையைச் செய்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் உண்மையில் பரலோகத்தின் ஆசாரியர்களாக செயல்படுகிறார்கள்; அவர்கள் இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே தேவனைச் சேவித்து, இரவும் பகலும் அவரைப் பணிந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் தேவனுடைய தூதர்களாகவும், பூமியில் நமக்கு தேவனுடைய உதவியாளர்களாகவும் சேவை செய்கிறார்கள் - வேதாகமம் முழுவதும் இது தெளிவாக உள்ளது. ஆனால் அவருடைய கட்டுப்பாடு முழுமையானது; அது தேவனுக்கு மட்டுமே உரியது.
>
> – Dr. கிரேன்ட் ஆர். ஆஸ்பார்ன்

> நடக்கும் எல்லாவற்றின் மீதும் தேவன் சர்வாதிகாரியாக இருக்கிறார். அவர் குறைந்தபட்சம் அதை அனுமதிக்கிறார், ஆனால் நடக்கும் பல விஷயங்களை அவர் ஆதரிக்கவோ அல்லது அங்கீகரிக்கவோ இல்லை. ஆனால் மக்கள் தேவனுடைய தார்மீக சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது ஒரு நாள் நாம் ஒரு ராஜ்யத்தை அனுபவிக்கப் போகிறோம். நியாயப்பிரமாணம் அவர்கள் இருதயங்களில் எழுதப்பட்டிருப்பதால் அவர்கள் மனப்பூர்வமாய் கீழ்படிவார்கள்.
>
> – Dr. ராபர்ட் பி. கிஷோல்ம், Jr.

அதனால்தான், பிலிப்பியர் 2:10-11 இல், அப்போஸ்தலனாகிய பவுல் அந்த நாளை எதிர்நோக்கியிருந்தார்:

> இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் (பிலிப்பியர் 2:10-11).

கர்த்தருடைய ஜெபத்தின் ஆரம்ப வரிகளில், இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் பழைய ஏற்பாட்டு கருப்பொருளை ஒரு வளரும், வரலாற்று, பூமிக்குரிய யதார்த்தமாக சுருக்கமாகக் கூறினார். சரித்திரம் முழுவதிலும் தேவனுடைய உண்மையுள்ள தீர்க்கதரிசிகள் எல்லாரும் விரும்பியதை போலவே, தேவனுடைய உலகளாவிய, மாறாத அரசாட்சி பூமியில் முழுமையாக வெளிப்படும் நாளுக்காக தேவனுடைய குமாரனும் ஏங்கினார். அந்த நாளில், தேவனுடைய மகிமை பூமியை நிரப்பும், ஒவ்வொரு சிருஷ்டியும் பரலோகத்தில் செய்வதைப் போலவே பூமியிலும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரலாற்றின் இந்த பார்வை பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் ஒவ்வொரு போதனைக்கும் ஆதாரமாக இருக்கிறது.

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி வேதாகமம் பரந்த மற்றும் குறுகிய அர்த்தங்களில் எப்படிப் பேசுகிறது என்பதை இப்போது நாம் வேறுபடுத்திப் பார்த்திருக்கிறோம், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் வரலாற்று வளர்ச்சியை வேதாகமம் எவ்வாறு சித்தரிக்கிறது என்பதை ஆராயப் போகிறோம். ஆதியாகமம் 1:1–11:9 இல் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்களை உள்ளடக்கிய "ஆதிகால வரலாறு" என்று அழைக்கப்படும் காலக்கட்டத்திலிருந்து நாம் தொடங்குவோம்.

# ஆதி கால வரலாறு

நவீன சுவிசேஷக சபையார் ஆதியாகமத்தின் ஆரம்பகால வரலாற்றை வாசிக்கும்போது, பூமியின் வயது, மனித வாழ்க்கையின் தோற்றம் மற்றும் பிற சமகால அறிவியல் பிரச்சினைகளைப் பற்றி அது என்ன சொல்கிறது என்பதில் நாம் அடிக்கடி கவனம் செலுத்துகிறோம். இந்த தலைப்புகள் முக்கியமானவை, ஆனால் இந்த அதிகாரங்கள் பூர்வ இஸ்ரவேலருக்கு எவ்வாறு முதன்முதலில் பூமியில் தேவனுடைய ராஜ்யம் வளர்ந்தது என்பதற்கான ஆரம்ப கட்டங்களை எவ்வாறு அறிமுகப்படுத்தின என்பதிலிருந்து அவை எளிதாக நம் கவனத்தை திருப்புகின்றன. ஆதிகால வரலாறு தேவன் இந்த காலத்தில் எப்படி ராஜாவாக செயல்பட்டார் என்பதை வலியுறுத்தியது – அதாவது அவர் பரலோகத்திலிருந்து தனது ஆட்சியை நீட்டிக்கும் இடமாக மாறும் வகையில், புலப்படும் உலகத்தை சிருஷ்டிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், அதை மக்களால் நிரப்புதற்கும் தனது அரச அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை இது வலியுறுத்துகிறது என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

> ஆதியாகமம் 1-11 இல் இருந்து நாம் காணும் வரலாற்றை ஆதிகால வரலாறு உள்ளடக்குகிறது; இது ஆபிரகாமிற்கு முந்தைய வரலாறு. எனவே, ஆதியாகமம் 1 இல் நாம் காண்கிறதைப் போல, உலகம் எவ்வாறு தோன்றியது என்பதையும் அது உள்ளடக்கியுள்ளது. மனிதவர்க்கத்தின் சிருஷ்டிப்பும், இந்த உலகத்தில் மனிதகுலம் எவ்வாறு உருவானது என்பதும் இதில் உள்ளது. அது ஒய்வுநாளையும், திருமணத்தையும், திருமண ஸ்தாபனத்தையும், ஆபிரகாமுக்கு முன்பாகத் தம்முடைய ஜனங்களோடு தேவன் நடந்துகொண்ட விதத்தையும், நோவாவையும்

> ஜலப்பிரளயத்தையும் தேவன் எப்படிக் கையாண்டார் என்பதையும் பற்றி கூறுகிறது.
>
> – Dr. டேனியல் சிமாங்கோ

மூன்று பிரச்சினைகளைப் பற்றி பேசுவதன் மூலம் பூமியின் வரலாற்றில் வளர்ந்து வரும் ராஜ்யம் அல்லது தேவனுடைய ஆட்சியைப் பற்றி ஆரம்பகால வரலாறு எவ்வாறு அறிமுகப்படுத்துகிறது என்பதை நாம் ஆராய்வோம்: முதலாவதாக, வேதத்தின் இந்த பகுதி எவ்வாறு பூமியை தேவனுடைய ராஜ்யத்தின் இடமாக விவரிக்கிறது; இரண்டாவதாக, தேவனுடைய ராஜ்ய நோக்கங்களுக்காக அது மக்களை எவ்வாறு அடையாளம் காட்டுகிறது; மூன்றாவதாக, இந்தக் காலகட்டத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் ஆரம்பகால வளர்ச்சியை அது எவ்வாறு சித்தரிக்கிறது என்பதாகும். தேவனுடைய ராஜ்யத்தின் இடமாக முதலில் பூமியைப் பார்ப்போம்.

## இடம்

ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள் பூமி பல வழிகளில் தேவனுடைய அரச ஆட்சியின் இடமாக ஆக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன, ஆனால் நாம் அதில் இரண்டில் மட்டும் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆரம்ப ஆயத்தங்கள் பூமிக்கான அவருடைய அரச நோக்கங்களை எவ்வாறு பிரதிபலித்தன என்பதைப் பற்றி பார்ப்போம். இரண்டாவதாக, பூமியில் தம்முடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கான காரியங்களை தேவன் எப்படி ஆயத்தம் செய்தார் என்பதை நாம் காண்போம். சிருஷ்டிப்பின் அற்புதமான ராஜ வடிவமைப்பில் தேவனுடைய ஆரம்ப ஆயத்தங்களை முதலில் பார்த்து தொடங்குவோம்.

### ஆரம்ப ஆயத்தங்கள்

பூமியில் தேவனுடைய ராஜ்யத்திற்கான தேவனுடைய ஆரம்ப ஆயத்தங்களைப் பற்றி ஆதிகால வரலாறு என்ன சொல்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, நமது நவீன கேள்விகளில் பலவற்றை இப்போதைக்கு நாம் ஒதுக்கி வைக்க வேண்டும். ஆதியாகமம் 1:1–2:3 இன் கதையை பண்டைய இஸ்ரவேலர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள் என்று நாம் முதலில் கேட்க வேண்டும். பண்டைய உலகம் முழுவதிலும், தெய்வீக மற்றும் மனித ராஜாக்கள் பெரும்பாலும் சிறந்த கட்டிடக் கலைஞர்களாகவும், கட்டிட வல்லுநர்களாகவும் மதிக்கப்பட்டனர் என்பதை அறிய இது உதவுகிறது. இப்படியாக, பல உரைபெயர்ப்பாளர்கள் சிருஷ்டிப்பின் கதை தேவனை உண்மையான தெய்வீக ராஜ சிற்பியாகவும், சிருஷ்டிப்பை அவரது பெரிய ராஜ அரண்மனையாக வடிவமைத்த கட்டிட வல்லுநராகவும் சித்தரிப்பதைக் காட்டியுள்ளனர். "[இது உண்டாகக்கடவது]" என்று சிருஷ்டிப்பைக் குறித்து

தேவன் சொல்லும் விபரம் குறிப்பிடப்படும் ஒவ்வொரு முறையும், தேவன் தம்முடைய பரலோக சிங்காசனத்திலிருந்து ராஜ கட்டளைகளின் மூலம் சிருஷ்டிப்பின் கட்டுமானத்தை வழிநடத்துவதாக அது சித்தரிக்கிறது. இதே போல், பிற பண்டைய இலக்கியங்களில் உள்ள இணையான பதிவுகள், ஒய்வு நாளில் தேவன் இளைப்பாறுவது என்பது, சிருஷ்டிப்பின் மீது தம்முடைய ராஜ அதிகாரத்தையும் வல்லமையையும் வெற்றிகரமாக செலுத்தியதற்காக மகிமையைப் பெற தேவன் தம்முடைய சிங்காசனத்தின்மேல் இளைப்பாறுவதை சித்தரிக்கிறது. இந்த வழிகளிலும் மற்ற வழிகளிலும், ஆதியாகமம் புஸ்தகத்தின் தொடக்கம் பண்டைய இஸ்ரவேலருக்கு அவர்களுடைய தெய்வீக சிற்பியும், கட்டிட வல்லுநராகவும் இருக்கிற தேவன், பரலோகத்திலிருந்து தம்முடைய ராஜ வல்லமையை முதலில் பரலோகத்திலிருந்து காணக்கூடிய உலகத்திற்கு எவ்வாறு விரிவுபடுத்தினார் என்பதைக் கற்பித்தது.

சிருஷ்டிப்பு பற்றிய கதை ஆதியாகமம் 1:1 இல் உள்ள தெரிந்த வார்த்தைகளுடன் தொடங்குகிறது:

> ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1).

இந்த ஆரம்ப வார்த்தைகள் தேவன் இரண்டு இடங்களை அல்லது நிலைகளை சிருஷ்டித்தார் என்ற உண்மையை நிறுவுகின்றன - அதாவது மேலே வானம் மற்றும் கீழே காணக்கூடிய பூமி. ஆதியாகமம் 1:2–2:3 இல் தேவன் தம்முடைய மகிமையான ராஜ்யபாரம் பரலோகத்திலிருந்து பூமிவரைக்கும் விரிவடைவதற்கான ஒரு இடமாக பூமியைக் கட்டத் தொடங்கினார். ஆதியாகமத்தின் இந்தப் பகுதியை நாம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம், இது உலகின் ஆரம்ப ஒழுங்கின்மையிலிருந்து தொடங்குகிறது. 1:2 பூமியை விவரிக்கும் விதத்தை கவனியுங்கள்:

> பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதியாகமம் 1:2).

நாம் இங்கே பார்க்கிறபடி, முதலில் பூமியோ அல்லது பரலோகத்திற்குக் கீழுள்ள சிருஷ்டியோ இருளாலும் ஆழத்தினாலும் மூடப்பட்டு ”ஒழுங்கின்மையும் வெறுமையுமாய்” இருந்தது.

இந்தக் கட்டத்தில், தேவனுடைய மகிமையான பரலோக சிங்காசன அறைக்கும் பூமிக்கும் இடையே கூர்மையான முரண்பாடு இருந்தது. நாம் இப்போது பார்த்தபடி, வேதாகமம் முழுவதிலும் பரலோகம் தேவனுடைய காணக்கூடாத மகிமையால் நிறைந்திருக்கிறது, ஆனால் பூமி அந்த நேரத்தில் அப்படி இல்லை. ”ஒழுங்கின்மை” மற்றும் ”வெறுமை” என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் வேறு இடங்களில் பூமியில் உள்ள காடு மற்றும் பாலைவன இடங்களைக் குறிக்க பயன்படுத்தப்படுகின்றன, அவை பெரும்பாலும் மனிதர்களால் வாழ முடியாத இடங்களைக் குறிக்கின்றன. "இருள்" மற்றும் "ஆழம்" என்ற சொற்கள் வேதாகமம் முழுவதிலும் மிகவும் எதிர்மறையான அர்த்தங்களைக் கொண்டுள்ளன.

ஆனால் ஆதியாகமம் 1:2 பூமியின் வரலாற்றைத் திறப்பதைப் பற்றிய மற்றொரு முக்கிய உண்மையை நமக்குக் கூறுகிறது. "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்" என்று இது கூறுகிறது. ஒளியின் தேவனும் ஜீவனின் தேவனுமாய் இருக்கிறவர் அதன் ஆரம்ப குழப்பமான நிலையில் பூமியை விட விரும்பவில்லை. அவருடைய ஆவியானவர் இருண்ட, உயிரற்ற உலகத்தின் மீது அசைவாடத் தொடங்கினார்.

ஆதியாகமம் 1 இல் சிருஷ்டிப்பு பற்றிய விபரத்தின் இரண்டாவது முக்கிய பகுதி, 3-31 வசனங்களில் உலகத்தை ஒரு அரண்மனை கட்டிடமாக மாற்ற தேவன் கட்டளையிட்ட ஆறு நாட்கள் ஆகும். இந்த ஆறு நாட்களும் தேவனுடைய அளவிடமுடியாத கட்டடக்கலை ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தும் ஒரு பகுத்தறியக் கூடிய மாதிரியை வெளிப்படுத்துகின்றன.

முதல் மூன்று நாட்களில், பூமி "ஒழுங்கின்மையாயிருந்தது" என்ற நிலையை தேவன் கையாண்டார். இரண்டாவது மூன்று நாட்களில், பூமி வெறுமையாயிருந்தது" என்ற நிலையை தேவன் கையாண்டார். இந்த இரண்டு நாட்களின் தொகுப்பிலும் தேவனுடைய செயல்கள் குறிப்பிடத்தக்க வழிகளில் ஒன்றுக்கொன்று இணையாக இருக்கின்றன. முதல் நாளில் தேவன் ஒரு பகலை உருவாக்கி, இருளை இரவாக மட்டுப்படுத்தினார். மற்றும் அதற்கேற்ப, நான்காம் நாளில் அவர் இந்த வரிசையை பராமரிக்க வானத்தில் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றை வைத்தார். இரண்டாம் நாளில் தேவன் ஆகாயத்தை உண்டாக்கி, கீழேயுள்ள ஜலத்தையும் மேலேயுள்ள ஜலத்தையும் பிரித்தார். பின்னர் ஐந்தாம் நாளில், தேவன் பறவைகளைக் கொண்டு தண்ணீர்கள் இடையே உள்ள இடைவெளியை நிரப்பினார், மற்றும் கடல் உயிரினங்களைக் கொண்டு கீழே இருக்கிற தண்ணீரை நிரப்பினார். மூன்றாம் நாளில் தேவன் பசுமையான, வளமான நிலத்தை உருவாக்குவதன் மூலம் கீழே உள்ள தண்ணீரைத் தடுத்தார். இறுதியாக ஆறாவது நாளில் தேவன் மிருகங்களையும் மனிதனையும் நிலத்தில் குடியிருக்கப் பண்ணினார். தேவன் உலகத்தை ஒழுங்குபடுத்தி அதை நிரப்பியபோது ஒப்பிடமுடியாத ராஜ ஞானத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தினார்.

சிருஷ்டிப்புக் கதையின் மூன்றாவதும் இறுதியுமான பகுதி ஓய்வுநாளைப் பற்றி 2:1-3 இல் சித்தரிக்கிறது. முந்தைய வசனங்களைப் போலவே, இந்த பதிவும் தேவனை ராஜ கட்டிடக் கலைஞராகவும் சிருஷ்டியை கட்டியெழுப்புபவராகவும் எடுத்துக்காட்டுகிறது. ஆதியாகமம் 2:3 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஒய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (ஆதியாகமம் 2:3).

இங்கே, தேவன் பரலோகத்தில் தம்முடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, தம்முடைய சாதனைகளில் மகிழ்ந்து, தாம் செய்த காரியங்களுக்காக மகிமையைப் பெற்றார் என்பது இங்கே படமாக காட்டப்படுகிறது. அவருடைய வேலை மிகவும் மகத்தானதாக இருந்ததால், ஒவ்வொரு ஒய்வுநாளிலும் தம்முடைய சாதனைகளை நினைவுகூரும்படி தேவன் இஸ்ரவேலுக்கு பத்து கட்டளைகளில் கட்டளையிட்டார்.

உண்மையில், ஆறு நாட்களுக்கு தேவன் தம்முடைய பரலோக சிங்காசனத்திலிருந்து ராஜ கட்டளைகளை பிறப்பித்தார், அது உலகத்தை இருளிலிருந்தும் குழப்பத்திலிருந்தும் ஒரு அற்புதமான அரச மாளிகையாக மாற்றியது என்று ஆதியாகமம் 1:1–2:3 நமக்குச் சொல்கிறது. இறுதியில், தேவன் அவர் செய்த செயல்களுக்காக ராஜ கட்டிடக்கலைஞர் மற்றும் சிருஷ்டியை காட்டியவர் என்கிற என கனத்தைப் பெற்றார்.

ஆதியாகமத்தின் தொடக்கத்தில் தேவன் தம்முடைய ராஜ்ய நோக்கங்களின் இடத்திற்கான ஆரம்ப ஆயத்தங்களை எப்படிச் செய்தார் என்பதை நாம் சிந்தித்திருக்கிறோம். இப்போது நாம் அடிக்கடி கவனிக்கப்படாத இந்த ராஜ வடிவமைப்பின் ஒரு விசேஷித்த அம்சத்திற்கு திரும்ப வேண்டும். பூமியின் கடையாந்தரங்களுக்குத் தம்முடைய அரசாட்சியின் தொடர்ச்சியான விரிவாக்கத்தை அவர் கட்டளையிட்டிருந்ததையும் தேவன் வெளிப்படுத்தினார்.

## நடந்துகொண்டிருக்கும் விரிவாக்கம்

ஆதியாகமம் 1:3-30 வரையிலான வேத பகுதி தேவன் தம்முடைய சிருஷ்டிப்பைப் பார்த்தபோது, அது "நல்லது" என்று அவர் கண்டார் என்று ஆறு முறை நமக்குச் சொல்கிறது. வசனம் 31 இல், ஆறாம் நாளில், அவர் தனது வேலையைப் பார்த்து, அவர் செய்ததெல்லாம் "மிகவும் நல்லது" என்று கண்டார். எபிரெய மொழியில் "நல்லது" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையான *டோவ்* (טוֹב) என்பது பழைய ஏற்பாட்டில் இங்கேயும் மற்ற இடங்களிலும், "இனிமையானது," "மகிழ்வளிக்கிறது," மற்றும் "அழகானது" என்று இது பொருள்களைத் தருகிறது. சிருஷ்டிப்பு நல்லது என்று வேதம் சொல்லும்போது, தேவன் தம்முடைய வேலையை அங்கீகரித்தார் என்று இதற்கு அர்த்தம். ஆனால் தேவன் செய்தது பூமியில் நிகழவிருந்த மிகப் பெரிய ஒன்றின் ஆரம்பமாக மட்டுமே இருந்தது என்பதை பார்க்கப் போகிறோம்.

எல்லா நேரங்களிலும், நல்ல அர்த்தமுள்ள கிறிஸ்தவர்கள், தேவன் தம்முடைய சிருஷ்டிப்பு "மிகவும் நல்லது" என்று சொன்னபோது, அவர் செய்யவேண்டியது எதுவுமில்லை அல்லது மேம்படுத்தப்படுவதற்கு எதுவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இல்லை என்று அர்த்தப்படுத்தினார் என்று தவறாக நம்புகிறார்கள். ஆனால் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆதியாகமம் 2:18 இல் "மனுஷன் தனியாக இருப்பது நல்லதல்ல" என்று தேவன் சொன்னார். ஒரு காலத்தில் உலகைச் சூழ்ந்திருந்த இருள், குழப்பம், ஆழம் ஆகியவை மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தன; ஆனால் அவைகள் அகற்றப்படவில்லை. தேவன் தனது புனிதமான, ராஜ தோட்டத்தில் மனிதகுலத்தை வைப்பதன் மூலம் தொடங்கினார். ஆனால் தேவன் ஆதியாகமம் 1:28 இல் ஆதாமை வரவழைத்து, பூமியை நிரப்பவும், அதை கீழ்படுத்தவும், பூமி முழுவதையும் ஆளவும் அழைத்தார். சிருஷ்டிப்பு ஆதி வாரத்தின் முடிவில் "மிகவும் நல்லதாக" இருந்தது, ஆனால் எல்லாம் தயாராக இருந்தது என்ற அர்த்தத்தில் மட்டுமே - அதாவது அவரது சிருஷ்டிப்புக்கான தேவனுடைய பெரிய ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்ற தயாராக இருந்தது.

ஆதியாகமம் 2:8-9 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார் (ஆதியாகமம் 2:8-9).

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில், ஓவியர்கள் பெரும்பாலும் ஒரு முழு படத்திற்கு வண்ணம் தீட்டுவதற்கு முன்பு தங்கள் வரைதிரைகளில் பென்சில் ஓவியங்களை உருவாக்குவதைப் போல தேவன் உலகை வடிவமைத்தார். ஒரு நாளில் உலகம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அவர் திட்டமிட்டதற்குத் தேவையான அடிப்படை ஒழுங்கை தேவன் நிறுவினார் ஆனால் அவர் உடனடியாக உலகின் முழு திட்டத்தையும் வரையவில்லை.

அதற்கு பதிலாக, நம் அறிவுக்கு எட்டாத அவரது ஞானத்தால், தேவன் அற்புதமான வண்ணங்களால் பூமியின் ஒரு பகுதியை மட்டுமே வரைந்தார். அவர் அதை பூமியின் மையமாக அலங்கரித்தார். பூமியின் இந்தப் பகுதி ஏதேன் என்று அழைக்கப்பட்டது. ஏதேனில் ஒரு தோட்டம் இருந்தது - அது ஒரு அற்புதமான அழகான இடமும் பரலோக ராஜாவின் விசேஷித்த பிரசன்னத்திற்கு பொருத்தமான ஒரு அற்புதமான புனித சொர்க்கமும் ஆகும். அது மிகவும் பரிசுத்தமாக இருந்தது, எனவே மற்ற சிருஷ்டிகளிடமிருந்து தனித்து வைக்கப்பட்டிருந்தது, தேவன் அங்கு நடந்து அவரது காணக்கூடிய மகிமையை வெளிப்படுத்தினார். ஆனால், அந்தத் தோட்டம் எவ்வளவு அற்புதமானதாக இருக்கிறதோ, அந்தளவுக்கு மகத்தானதாகவும் இருந்தது, பூமி இதே நிலையில் இருப்பது சரித்திரத்திற்கான தேவனுடைய குறிக்கோள் அல்ல.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மாறாக, முழு பூமியும் பரிசுத்த ஏதேன் தோட்டத்தைப் போல ஆக வேண்டும், இதனால் ஒரு நாள், அவரது காணக்கூடிய மகிமை முழு சிருஷ்டிப்பையும் நிரப்பும். முதல் வாரத்தின் முடிவில் பூமியின் நிலைமை பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வளர்ந்து வரும், வரலாற்று ராஜ்யத்தைப் பற்றி போதிக்கும் எல்லாவற்றிற்கும் ஆரம்ப புள்ளியாக இருந்தது.

> எனவே, நம்முடைய சிருஷ்டிப்பின் கலாச்சார கட்டளை என்னவென்றால் நாம் அவருக்கு உக்கிராணக்காரர்களாகவும், அவருடன் உறவு கொண்டு தேவனின் சிருஷ்டிகளாகவும், அந்த தோட்டத்தில் சரணாலயத்தின் எல்லைகளை விரிவாக்கவும் செய்ய வேண்டும் மற்றும் ஆராதனை, பக்தி, கீழ்ப்படிதல், அவரது சிருஷ்டிப்பு என அனைத்து வளங்களை ஆராய்ந்து அவ்வாறு செய்ய வேண்டும், மேலும் நிச்சயமாக, புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியில் இது முடிவடைவும்.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

இதுவரை, ஆதி காலம், தேவன் தம்முடைய வளர்ந்து வரும், வரலாற்று ராஜ்யத்தின் இடமாக இருக்க உலகத்தை ஆயத்தப்படுத்துவதிலிருந்து தொடங்கியது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இப்போது, நாம் வேதாகமப் பதிவின் இரண்டாவது முக்கியமான அம்சமான ‘உலக வரலாற்றின் இந்தக் கட்டத்தில் தேவன் மக்களுக்காக நியமித்த பாத்திரத்திற்கு’ திரும்ப வேண்டும்.

## மக்கள்

வேதவாக்கியங்கள் மனிதர்களை எவ்வளவு குறிப்பிடுகின்றன என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? அது மக்களை ஒரு வழியில் அல்லது மற்றொரு வழியில் குறிப்பிட வேண்டாம் என்று வேதாகமத்தின் ஒரு பக்கத்தில் கூட கண்டுபிடிக்க முடியாது. முதலில், இது விசித்திரமாகத் தோன்றலாம், ஏனென்றால் நாம் வழக்கமாக வேதத்தை தேவன் யார், அவர் என்ன செய்திருக்கிறார் என்பதற்கான வெளிப்பாடாக நினைக்கிறோம். இது நிச்சயமாக உண்மைதான். ஆனால் வேதாகம வரலாற்றின் நாடகம், சிருஷ்டிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் மனிதர்கள் வகிக்கும் விசேஷமான, முக்கியமான பங்கையும் வலியுறுத்துகிறது. நிச்சயமாக, மனிதர்களிடம் தேவனுடைய கருணை இல்லாவிட்டால் வேறு எந்த நன்மையையும் செய்ய முடியாது. இந்த காரணத்திற்காக, ஒரு இறுதி அர்த்தத்தில், அனைத்து மகிமையும் தேவனுக்கு மட்டுமே சொந்தமானது. இருந்தாலும், முக்கியமாக மனித இனத்தின் மூலம் தேவன் தம்முடைய ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்ற தீர்மானித்தார் என்பதை வேதாகமம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெளிவாக்குகிறது. இதனால்தான் வேதாகமத்தில் ஜனங்களைப் பற்றி அதிக காரியங்களை வேதத்தில் சொல்லவேண்டியிருந்தது. மனிதர்கள் முதலில் சிருஷ்டிக்கப்பட்டதற்கான நோக்கங்களை நிறைவேற்றும் ஒரே பரிபூரண, நீதியுள்ள மனிதரான இயேசுவின் மனிதத்தன்மையை புதிய ஏற்பாடு ஏன் வலியுறுத்துகிறது என்பது விளக்கப்படுகிறது.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமைப் பற்றி தேவன் இப்படிச் சொன்ன ஆதியாகமம் 2:18-ல் மனிதவர்க்கத்திற்கான இந்த விசேஷ பாத்திரம் தெளிவாகிறது:

> பின்பு, தேவனாகிய கர்த்தர்: "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்றார் (ஆதியாகமம் 2:18).

முன்னதாக, ஆதியாகமம் 1-ல், சிருஷ்டிப்பு "மிகவும் நல்லது" என்று தேவன் முடிவாக சொன்னார். ஆனால் அவர் தனது ராஜ தோட்டத்தில் "நல்லதல்ல" என்கிற ஒன்றை கண்டுபிடித்தார் - அதாவது ஆதாமுக்கு மனைவி இல்லை என்பதை கண்டார். ஆனால் இது ஏன் நல்லதல்ல? ஏனென்றால், ஒரு மனிதன் தன்னிச்சையாக சாதிக்க முடியாத அளவுக்குப் பெரியதாக இருந்த ஒரு நோக்கத்திற்காகவே தேவன் மனிதகுலத்தை சிருஷ்டித்தார். பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியில் மனிதவர்க்கத்தின் பங்கை நிறைவேற்ற அநேகர் தேவைப்பட்டார்கள்.

மக்களுக்கான இந்த முக்கியமான பாத்திரம் இரண்டு வழிகளில் விவரிக்கப்படுகிறது. தேவன் ஆதாமையும் ஏவாளையும் தம்முடைய ஆசாரியர்களாகவும், அவருடைய துணை-பிரதிநிதிகளாகவும் அல்லது அரச பிரதிநிதிகளாகவும் சேவிக்கும்படி செய்தார். இந்த பாத்திரங்கள் வேதாகமத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஆனால் தேவனுடைய ஆசாரியர்களாக மனிதர்களின் சேவையை முதலில் தொடங்கி, அவற்றை நாம் தனித்தனியாகப் பார்ப்போம்.

## ஆசாரியர்கள்

ஒருபுறம், ஆதாமுக்கும் , பின்னர் ஏவாளுக்கும் அவரோடு சேர்ந்து தேவனுடைய ஆசாரிய சேவை செய்யும் பணி கொடுக்கப்பட்டது. ஆராதனை செய்வதன் மூலம் தேவனை மகிமைப்படுத்த அவன் அழைக்கப்பட்டான். தானியேலின் தரிசனத்தில், எண்ணற்ற சிருஷ்டிகள் அவருடைய பரலோக பிரகாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் ஊழியம் செய்கிறார்கள் என்பதை நாம் முன்பே பார்த்தோம். ஆதாமும் ஏவாளும் பூமியில் இதைத் தான் செய்ய அழைக்கப்பட்டார்கள். ஆதியாகமம் 2:15 இல் மனிதவர்க்கத்திற்கான இந்த ஆசாரிய பாத்திரத்தை நாம் காணலாம், அங்கு நாம் பின்வரும் வார்த்தைகளை வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதியாகமம் 2:15).

முதல் பார்வையில், இந்த வேத பகுதி ஆதாமை ஒரு தோட்டக்காரராக இருக்க தேவன் அழைத்தார் என்று வெறுமனே குறிப்பிடுகிறது என்று நாம் நினைக்கலாம். ஆனால் ஏதேன் தோட்டம் தேவனுக்கு ஒரு புனிதமான, ராஜ தோட்டமாக இருந்ததால் அவனது பணி இதை விட மேலானதாக இருந்தது. ”அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்” என்ற சொற்றொடர் அசாதாரணமானது, இது மோசேக்கும் பண்டைய இஸ்ரவேலுக்கும் ஒரு விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. பல இடங்களில், ஆசரிப்பு கூடாரத்தில் தேவனுடைய மகிமைக்கு முன்பாக ஆசாரியர்களும் லேவியரும் செய்த வேலையை விவரிக்க முதல் ஐந்து ஆகமங்களிலுள்ள இதே போன்ற சொல் பயன்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, எண்ணாகமம் 3:8 இல் நாம் வாசிக்கிறோம்:

> அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் தட்டுமுட்டு முதலானவைகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யக்கடவர்கள் (எண்ணாகமம் 3:8).

தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இருந்த பங்கு பற்றிய விவரிப்பு, தேவனுக்குரிய ஆசாரிய ஊழியத்தில் லேவியர்களின் பங்கைப் பற்றிய இந்த விளக்கத்தைப் பிரதிபலிக்கிறது.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய பரிசுத்த, அரச தோட்டத்தில், அதாவது பூமியில் தெய்வீக ராஜாவின் மகிமையான இடத்தில் வைக்கப்பட்டனர். தேவனுடைய மகிமை இஸ்ரவேலுக்கு முன்பாகத் தோன்றிய வாசஸ்தலத்தில் ஆசாரியர்களும் லேவியரும் பிற்காலத்தில் சேவித்ததுபோல, அங்கே அவர்கள் தேவனைச் சேவித்தார்கள். ஆதாமும் ஏவாளும் பரிசுத்த ஆசாரிய சேவையாக தங்கள் எல்லா வேலைகளையும் செய்ய அழைக்கப்பட்டனர் - அதாவது ஆராதனையில் மகா தெய்வீக ராஜாவை கனம்பண்ண வடிவமைக்கப்பட்ட செயல்களாக அவர்களின் சேவைகள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர்.

மறுபக்கத்தில், பூமியில் வாழ்ந்த முதல் ஜனங்கள் தேவனுடைய ஆசாரியர்களாக சேவை செய்ய மட்டும் அழைக்கப்படவில்லை. தேவன் அவர்களைத் தம்முடைய துணை பிரதிநிதிகளாக, தம்முடைய அரச பிரதிநிதிகளாகச் சேவை செய்யும்படியும் அழைத்தார். உண்மையில், ஆதாமும் ஏவாளும் தேவனுடைய அரச ஆசாரியர்களாக இருந்தார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## துணைப் பிரதிநிதிகள்

ஆதியாகமம் 1:26 இல் ஆதாம் மற்றும் ஏவாளைப் பற்றிய இந்த விளக்கத்தை நாம் காண்கிறோம், அங்கு நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> பின்பு தேவன்: "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" என்றார் (ஆதியாகமம் 1:26).

வேதவாக்கியங்களை நன்கு அறிந்த ஒவ்வொருவரும், இந்தப் பகுதியும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் உள்ள பல வேத பகுதிகளும் மனிதர்களை தேவனின் "சாயல்" அல்லது "ரூபம்" என்று அழைக்கின்றன என்பதை அறிவார்கள். கடந்த காலத்தில், பெரும்பாலான இறையியலாளர்கள் மனிதர்கள் பகுத்தறிவு கொண்டவர்களாகவும் தார்மீக மற்றும் மதம் சார்ந்த ஜீவிகளாகவும் வெறுமனே அர்த்தப்படுத்துவதாகவே கருதினர். ஆனால், இவ்விதமான பாரம்பரிய கிறிஸ்தவ கண்ணோட்டங்கள் இருந்தாலும் இது ஆதியாகமம் 1 இன் கவனம் அல்ல.

தேவன் மனிதர்களைத் தம்முடைய ரூபமாகவும் சாயலாகவும் அழைப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது, பண்டைய உலகின் ஒரு பொதுவான நடைமுறையை அறிய அது உதவுகிறது. இஸ்ரவேலுக்கு வெளியே, பார்வோன்கள், ராஜாக்கள் மற்றும் பேரரசர்கள் பெரும்பாலும் தங்கள் தெய்வங்களின் "உருவங்கள்," "ஒப்புமைகள்" மற்றும் "குமாரர்கள்" என்று அழைக்கப்பட்டனர். பூமியில் தங்கள் தேவர்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஜீவனுள்ள பிம்பங்களாக அவர்கள் கருதப்பட்டனர். பரலோகத்தின் பிரதிநிதிகளாக, ராஜாக்கள் பண்டைய சமூகங்களில் பரலோகத்தில் தங்கள் தேவர்களின் சித்தத்தைக் கற்றுக்கொள்வதற்கும், பின்னர் பூமியில் இந்த சித்தத்தை நிறைவேற்ற தங்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குமான விசேஷித்த பணியைக் கொண்டிருந்தனர். தேவனுடைய சித்தம் பரலோகத்தில் நடப்பதுபோல, பூமியிலும் செய்யப்பட வேண்டும் என்று ஜெபிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சொன்னார் என்பதில் ஆச்சரியமில்லை. இது அவரது அரச பணியாக இருந்தது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:22 இல், மோசே எகிப்தின் நியாயவிதிகளின் வழிகளைக் கற்றுக்கொண்டார் என்பதை ஸ்தேவான் நினைவுகூர்ந்தார். எகிப்தின் பார்வோன்கள் மற்ற தேசங்களின் ராஜாக்களும் தங்கள் தெய்வங்களின் "சாயல்கள்,", "ரூபங்கள்" அல்லது "குமாரர்கள்" என்று அழைக்கப்பட்டு சாதாரண மனிதர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்திக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காட்டுவதை மோசே நன்கு அறிந்திருந்தார். ஆனால் பரிசுத்த ஆவியின் ஏவுதலின் கீழ், மோசே இந்த பரவலான பொய்யான நம்பிக்கையை எதிர்த்தார். ஆரம்பத்தில், இஸ்ரவேலின் உண்மையான தேவன் ஒரு சில ராஜாக்கள் மற்றும் பேரரசர்கள் மட்டுமல்ல உண்மையில் *அனைத்து* மனிதர்களும் தேவனுடைய சாயலாகவும் தேவனுடைய உண்மையான அரச ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அறிவித்திருந்தார். அந்த கால இஸ்ரவேலர்கள் நம்புவதற்கு இது ஒரு கடினமான பாடமாக இருந்திருக்க வேண்டும். இந்த முன்னாள் அடிமைகள் தங்களையும் உலகில் தங்கள் பங்கையும் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. தேவன் ஒவ்வொரு இஸ்ரவேலரையும், மற்ற எல்லா மனிதர்களோடும் சேர்த்து, அவருடைய அரச, ஆசாரிய பிரதிநிதிகளாக சேவை செய்யும்படி கட்டளையிட்டிருந்தார்.

நமது நாளில், மனிதர்கள் சீரற்ற வரலாற்று சூழ்நிலைகளின் விளைவை விட சற்று அதிகமானவர்கள் என்று நவீன மதச்சார்பற்ற கலாச்சாரங்கள் நமக்குக் கற்பிக்கின்றன. ஆனால் நம்மைப் பற்றிய நமது கண்ணோட்டமும், மற்றவர்களைப் பற்றிய நமது கண்ணோட்டமும் தேவன் நம்மைப் பற்றி முதலில் சொன்னபடி இருக்க வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது. நாம் அனைவரும் தேவனுடைய ஆசாரிய, ராஜ சாயல்களாகப் படைக்கப்பட்டிருக்கிறோம், தேவனுடைய சித்தம் பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமியிலும் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக அழைக்கப்படுகிறோம்.

ஆதியாகமம் 1:27-28 இல் தேவன் தம்முடைய பரலோக சிங்காசனத்திலிருந்து ஆசீர்வாதத்தின் வார்த்தைகளை உச்சரித்தபோது, மனிதவர்க்கத்தின் சேவையைப் பற்றி விரிவாக விவரித்ததை நாம் காண்கிறோம்:

> தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்" என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1:27-28).

ஆதிமுதல் தேவன் ஒவ்வொரு மனிதனையும் தம்முடைய ஆசாரியராகவும், ராஜ சாயலாகவும் இருக்குமாறும், இறையியலாளர்கள் அடிக்கடி "கலாச்சார கட்டளை" என்று அழைப்பதை நிறைவேற்றுமாறும் அழைத்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் பார்த்தபடி, தேவன் சிருஷ்டிப்பில் ஒழுங்கு மற்றும் அழகின் அளவை நிறுவினார், மேலும் அவர் அரச ஆசாரியர்களாக அவருக்கு சேவை செய்ய தனது அற்புதமான, பரிசுத்த தோட்டத்தில் மனிதகுலத்தை வைத்தார். பரலோகத்தின் பெரிய ராஜா தனது ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்கான கருவியாக மனிதகுலத்தை நியமித்தார். தேவனுடைய சித்தத்தை பூமிக்குக் கொண்டுவந்து, உலகம் முழுவதிலும் அவரைச் சேவிப்பதற்காக, மனிதர்களை உருவாக்கி, பரந்து விரிந்து, முழு பூமியையும் தேவனுடைய தோட்டத்தைப்போல் ஆக்கிக்கொள்ளவேண்டும். தேவனுடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் விரிவுபடுத்துவது, தேவன் மனிதர்களை பூமியில் வைத்த ஒரே நோக்கமாக இருந்தது.

இப்போது, நவீன மனிதர்களாகிய நாம் இந்த வழிகளில் நமது இருப்பின் நோக்கத்தைப் பற்றி எப்போதாவதுதான் சிந்திக்கிறோம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று யாராவது உங்களிடன் கேட்கும்போது, "சரி, நான் பலனளிக்கிறேன், நான் பலுகிப் பெருகி நான் பூமியை நிரப்பி, அதை கீழ்ப்படுத்துகிறேன், தேவனுக்காக ஆளுகை செய்கிறேன்" என்று எத்தனை முறை நாம் இதை சொல்கிறோம்? இந்தக் கருத்துக்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அநேகருக்கு மிகவும் அந்நியமானவைகளாக இருக்கின்றன, இந்த வழிகளில் நமது வாழ்க்கையில் நாம் என்ன செய்கிறோம் என்பதை விவரிப்பது பற்றி நாம் அரிதாகவே சிந்திக்கிறோம். எனவே, உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி நீங்கள் குழப்பமடைந்தால் ஆச்சரியப்பட வேண்டாம். மனிதர்களைப் பற்றி தேவன் முதலில் சொன்னதை புரிந்து கொள்வதன் மூலம் நாம் வாழ்க்கையில் நமது நோக்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். நாம் தேவனுடைய அரச ஆசாரியர்களாக ஆக்கப்பட்டோம். தேவனுடைய ஆட்சி பூமியின் எல்லைகள் வரை பரவியிருப்பதை உறுதி செய்வதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டோம், இதனால் ஒரு நாள் முழு சிருஷ்டிப்பும் அவருக்கு எல்லையில்லா துதி உண்டாக தேவனுடைய காணக்கூடிய மகிமையால் நிரப்பப்படும்.

ஆதிகால சரித்திரத்தில் தேவன் பூமியைத் தம்முடைய ராஜ்யத்தின் ஸ்தலமாகவும், ஜனங்களைத் தம்முடைய ராஜ்யத்தின் ஊழியக்காரராகவும் ஸ்தாபித்தார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இந்தக் காலத்தில் தேவனுடைய வளர்ந்து வரும் பூமிக்குரிய ராஜ்யத்தின் வளர்ச்சியை இப்போது நாம் சுருக்கமாக வரைய வேண்டும்.

## வளர்ச்சி

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழாமல் இருந்திருந்தால், தேவனுடைய சாயலாக மனிதகுலத்தின் சேவையின் பாதை ஒரு நேரடியான விஷயமாக இருந்திருக்கும். ஆதாமும் ஏவாளும் பிள்ளைகளைப் பெற்றிருப்பார்கள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுடைய பிள்ளைகள் தங்கள் சொந்தப் பிள்ளைகளைப் பெற்றிருப்பார்கள், இப்படியாக இது தொடர்ந்திருக்கும். மற்றும் ஒன்றாக தேவனுடைய இந்த பெரிய எண்ணிக்கையிலான ஆசாரிய, ராஜ சாயல்கள் பூமியை நிரப்பி, அதை கீழ்படுத்தி, தேவனுடைய கட்டளைகளின்படி ஆட்சி செய்திருப்பார்கள். ஆனால் நாம் நன்கு அறிந்திருக்கிறபடி , விஷயங்கள் இந்த திசையில் செல்லவில்லை. பாவம் விரைவில் மனிதகுலத்தின் நேரான பாதையை ஒரு நீண்ட, திருகிய சிக்கலின் பாதையாக மாற்றியது. ஆயினும்கூட, ஆதி கால வரலாற்றின் ஆரம்பத்தில் இந்த சிக்கல்கள் இருந்தபோதிலும், அவற்றுக்கான தனது நோக்கம் தோல்வியடையாது என்று தேவன் மனிதகுலத்திற்கு உறுதியளித்தார்.

ஆதிகாலத்தின்போது தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லக்கூடிய நிறைய விஷயங்கள் உள்ளன, ஆனால் நாம் அதை மூன்று படிகளில் சுருக்கமாகக் கூறுவோம். முதலாவதாக, நடந்த பிரபஞ்ச துரோகத்தைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, மனிதகுலத்தின் ஊழல் எவ்வாறு அதிகரித்தது மற்றும் கடுமையான தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு வழிவகுத்தது என்பதைப் பார்ப்போம். ஆனால் மூன்றாவதாக, தம்முடைய ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்ற மனிதகுலத்திற்கு உதவும் ஒரு நீண்ட கால யுக்தியை தேவன் ஸ்தாபித்தார் என்பதை நாம் காண்போம். தெய்வீக ராஜாவுக்கு எதிராக நடந்த பிரபஞ்ச துரோகத்தை முதலில் பார்ப்போம்.

## பிரபஞ்ச துரோகம்

தங்கள் தெய்வீக ராஜா கட்டளையிட்டதை உண்மையுடன் நிறைவேற்றுவதற்குப் பதிலாக, ஆதாமும் ஏவாளும் சாத்தானின் சோதனைக்கு அடிபணிந்து, தடைசெய்யப்பட்ட பழங்களை உண்பதன் மூலம் கலகம் செய்தனர். ஆகவே, ஏதேன் தோட்டத்தை பூமியின் கடையாந்தரம் வரை பரப்புவதற்குப் பதிலாக, அவர்கள் சாபத்தின் கீழ் வாழ்வதற்காக தோட்டத்தை விட்டும் வெளியேற்றப்பட்டனர். ஆயினும்கூட, ராஜ்யத்தைக் கட்டியெழுப்புபவர்களாக மனிதகுலத்தின் பொறுப்புகள் இன்னும் முடிவடையவில்லை. ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய சந்ததியும் இன்னும் பலுகிப் பெருகவும், தேவனுடைய சேவையில் பூமியை ஆளவும் வேண்டியிருந்தது. இருந்த போதிலும், தேவன் மனிதகுலத்தையும் பூமியையும் சபித்தார், இதனால் பெருக்கமும் ஆளுகையும் வலிமிகுந்ததாகவும், கடினமாகவும், வெறுப்பாகவும் மாறியது. பலுகிப் பெருகுதல் பற்றி, ஆதியாகமம் 3:16 இல் தேவன் ஏவாளிடம் இந்த வார்த்தைகளை கூறினார்:

> நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய் (ஆதியாகமம் 3:16).

ஆளுகையைப் பற்றி, வசனம் 17 இல் தேவன் ஆதாமை இவ்வாறு எச்சரித்தார்:

> பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய் (ஆதியாகமம் 3:17).

துரதிர்ஷ்டவசமாக, தேவனுடைய ஆசாரிய, ராஜ சாயல்கள் ஒரு விரோதமான உலகில் வசிக்கவும், தேவன் அவற்றை அமைத்த பணியில் வலி மற்றும் பயனற்ற தன்மையை அனுபவிக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டன.

ஆதிகாலத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியைப் பற்றிய பதிவு ஆதாமும் ஏவாளும் செய்த பிரபஞ்ச துரோகத்துடன் தொடங்கியது. ஆனால் அவர்களின் சந்ததியினர் இறுதியில் தேவனிடமிருந்து கடுமையான நியாயத்தீர்ப்புக்கு வழிவகுத்த ஊழல் பாதையைப் பின்தொடர்ந்தனர்.

## ஊழல் மற்றும் நியாயத்தீர்ப்பு

ஆதியாகமம் புத்தகத்தின்படி, ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்தபோது, அவர்களுடைய சந்ததிகள் எல்லாரும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது இனிமேலும் உண்மையாக இருக்கவில்லை. சொல்லப்போனால், தேவனுடைய மீட்கும் இரக்கத்தைத் தவிர, அவர்களில் எவராலும் தேவனுடைய உண்மையுள்ள சாயல்களாகச் சேவை செய்ய முடியவில்லை. மனித இனத்தின் பெரும்பகுதி தேவனுக்கு எதிராக தொடர்ந்து கலகம் செய்தது. ஆதாம் மற்றும் ஏவாளின் முதல் குமாரனாகிய காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்தான். ஆதியாகமம் 4 இல் உள்ள காயீனின் வம்ச வரலாறு, காயீனின் குடும்பம் வளர வளர, அவர்களுடைய கலகம் மோசமடைந்தது என்று நமக்குச் சொல்கிறது. தேவனுடைய ராஜரீக ஆசாரியர்களாக சேவை செய்வதற்குப் பதிலாக, காயீனின் சந்ததியினர் தேவனுடைய ஆட்சிக்கு எதிராகத் தங்களை உயர்த்திக் கொண்டு, மற்ற மனிதர்களுக்கு எதிரான வன்முறையால் பூமியை நிரப்பினர். காலம் செல்லச் செல்ல, மனிதகுலத்தின் வன்முறை தேவன் ஒரு உலகளாவிய ஜலப்பிரளயத்தால் பூமியை சுத்திகரிக்க காரணமாக இருந்தது. ஆதியாகமம் 6:5-7 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: "நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது" என்றார் (ஆதியாகமம் 6:5-7).

ஆரம்பகால வரலாற்றின் போது தேவனுடைய ராஜ்யத்தினுடைய வளர்ச்சியின் பதிவு, மனிதகுலத்தின் பிரபஞ்ச துரோகத்தையும், அவர்களின் ஊழல் மற்றும் அடுத்தடுத்த நியாயத்தீர்ப்பை மட்டும் உள்ளடக்கவில்லை. அது தேவன் இறுதியில் உலகம் முழுவதும் அவரது ராஜ்யம் பரவுவதற்கு வழிவகுக்கும் என்று ஒரு நீண்ட கால யுக்தி நிறுவப்பட்டது என்று வெளிப்படுத்துகிறது. உண்மையில், காலப்போக்கில் தனக்காக ஒரு ஜனத்தை மீட்டு, அவர்கள் மூலமாகத் தம்முடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப தேவன் தீர்மானித்தார்.

## நீண்ட கால யுக்தி

இந்த நீண்ட கால யுக்தியின் முதல் குறிப்பு ஆதியாகமம் 3:15 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கே, ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ய அவர்களை தூண்டிவிட்ட சர்ப்பத்தை தேவன் இந்த வார்த்தைகளால் சபித்தார்:

> உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதியாகமம் 3:15).

இந்த பகுதியில், தேவன் மனித இனம் இரண்டு கட்சிகளாக பிரிக்கப்படும் என்று சர்ப்பத்திடம் அறிவித்தார்: சாத்தானின் சந்ததி, அல்லது "வித்து" என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்படும் – சாத்தானின் கலகக்கார வழிகளுடன் தங்களை இணைத்துக்கொள்ளும் அந்த மனிதர்கள் – மற்றும் ஏவாளின் சந்ததி, அவர்கள் தேவனுக்கு உண்மையுடன் சேவை செய்ய விரும்பும் மனிதர்கள். இந்த இரண்டு மக்கள் குழுக்களும் வரலாறு முழுவதும் ஒருவருக்கொருவர் பகைமையுடன் இருப்பார்கள். ஒரு நாள் மீட்கப்பட்ட மனிதகுலமான ஏவாளின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கி, பிரபஞ்ச துரோகத்திற்கு அவர்களை வழிநடத்தியவரை வெல்லும் என்றும் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். இந்த வாக்குத்தத்தம் இறுதியில் கிறிஸ்துவால் நிறைவேற்றப்படுகிறது. ரோமர் 16:20 இல் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு பவுல் உறுதியளித்த விதத்தை கவனியுங்கள்:

> சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார் (ரோமர் 16:20).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மீட்கப்பட்ட, தேவனுடைய உண்மையுள்ள சாயல்களுக்கு பொல்லாங்கின் மீது வெற்றியின் நம்பிக்கை வரலாறு முழுவதும் விரிவடைந்து, தேவனுடைய பரிபூரண ரூபமான கிறிஸ்துவுக்குள் அதன் நிறைவேற்றத்தை அடைகிறது.

தேவனுடைய ராஜ்யத்திற்கான நீண்டகால யுக்தியின் காரணமாக, உண்மையுள்ள ஆபேலுக்குப் பதிலாக சேத் என்ற மூன்றாவது குமாரன் பிறந்தான். ஆதியாகமம் 5-ன் வம்ச வரலாறு நமக்குச் சொல்லுகிறபடி, சேத்தும் அவனுடைய சந்ததியாரும் தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய ராஜ்யத்தை பூமியெங்கும் விரிவுபடுத்த முயன்றனர். தேவன் மனிதகுலத்தின் பெரும்பகுதியை அழித்தார் என்று மனித வன்முறை உலகத்தை நிரப்பியபோது கூட, சேத்தின் சந்ததியான - நோவா - தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தார், தேவனின் கண்களில் தயவைக் கண்டார். நோவாவின் நாளின் பெரும் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, தேவன் தம்முடைய ராஜ்யத்துக்கு மனிதவர்க்கத்தின் சேவையை நிறைவேற்றுவதற்கான அவருடைய நீண்டகால யுக்தியை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

ஆதியாகமம் 8:21-22 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார் (ஆதியாகமம் 8:21-22).

எல்லா மனிதர்களும் தங்கள் சிறுவயதிலிருந்தே தீமைக்கு ஆளாகிறார்கள் என்பதை தேவன் எப்படி அறிந்து கொண்டார் என்பதைக் கவனியுங்கள். பாவம் தனது விழுந்த சாயலின் மீது தொடர்ந்து அழிவை ஏற்படுத்தும் என்று அவருக்கு தெரிந்திருந்தது. எனவே, வானவில்லின் அடையாளத்தின் கீழ், ”விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடை காலமும் மாரி காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை” என்ற இயற்கையான ஒழுங்கை ஸ்திரப்படுத்தப்போவதாக தேவன் அறிவித்தார். ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவன் ஏன் இயற்கைக்கு இந்த பாதுகாப்பான ஒழுங்கை நிறுவினார்? ஆதியாகமம் 9:1-ல் உடனடியாகப் பின்தொடரும் வார்த்தைகளில் அதற்குரிய காரணம் தெளிவாகிறது:

> பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: ”நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” என்றார் (ஆதியாகமம் 9:1).

இந்த வசனம் நமக்குச் சொல்லுகிறபடி, தம்முடைய ராஜ்ய நோக்கங்களுக்காக மனிதர்கள் சேவை செய்ய வேண்டும் என்ற தம்முடைய அழைப்பை தேவன் புதுப்பித்தார். தேவனுடைய ரூபம் அவருடைய ராஜ்யத்திற்கு அதன் அசல் சேவையை நிறைவேற்றும் வகையில் அவர் இயற்கையின் ஸ்திரத்தன்மையை நிறுவினார்.

> நாம் ஆதியாகமம் 1-க்கு திரும்புவோம் - தேவன் மனிதகுலத்தைப் படைத்தபோது ஆணும் பெண்ணுமாகிய நம்மைத் தம்முடைய சாயலில் சிருஷ்டித்து, "பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" என்றார். அது பாவம் நுழையும் முன் அவர் சொன்னது அல்ல … ஆனால் அவர் ஜலப்பிரளயத்தினால் பூமியை அழித்த பிறகு, மற்றும் நோவா மற்றும் அவரது மனைவி மற்றும் மகன்கள் மற்றும் அவர்களின் மனைவிகள், அவர்கள் அனைவரும் பேழையிலிருந்து வெளியே வந்த பிறகு, "பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று அவர் மீண்டும் கூறுகிறார். நம்முடைய நன்மைக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் தேவன் இந்தப் பூமியை நமக்குக் கொடுத்திருக்கிறார்.
>
> – Dr. ரிக் பாய்டு

இந்தக் கட்டத்திலிருந்து, தேவனுடைய ராஜ்யத்துக்கு மனிதவர்க்கத்தின் சேவையின் பாதை எப்படி நேரடியானதாகவோ அல்லது தடையற்றதாகவோ இருக்கவில்லை என்பதை வேதவசனங்கள் வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய மக்கள் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டனர். அவர்கள் தோல்வியுற்று பல பின்னடைவுகளை சந்தித்தனர். ஆயினும், ஒரு நாள் தேவனுடைய சாயல் பூமியின் கடையாந்தரங்களுக்குத் தம்முடைய ராஜ்யத்தைப் பரப்பும் பணியை நிறைவேற்றும்படி, தேவன் இயற்கையில் நீண்டகால ஸ்திரத்தன்மையை ஸ்தாபித்தார்.

ஆதிகால வரலாற்றின்போது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், இப்போது பழைய ஏற்பாட்டில் ராஜ்ய வரலாற்றின் அடுத்த முக்கிய கட்டத்திற்கு செல்ல நாம் தயாராக இருக்கிறோம், தேவன் குறிப்பாக இஸ்ரவேல் தேசத்தைத் தம்முடைய ராஜ்யத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களாகக் கையாண்ட காலகடிதத்தைக் குறித்து பார்க்கப் போகிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இஸ்ரவேல் தேசம்

இஸ்ரவேல் தேசம் வேதாகம வரலாற்றில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்ற உண்மையை இழப்பது கடினமான காரியம். ஆனால் ஏன்? வேதாகமம் இஸ்ரவேல் ஜனங்களை மையமாகக் கொள்கிறது, ஏனென்றால் ஆதிமுதல் தம்முடைய சாயல்களுக்காக அவர் நியமித்த சேவையில் முழு மனித இனத்தையும் வழிநடத்த தேவன் அவர்களைத் தேர்ந்தெடுத்தார். இஸ்ரவேலர்கள் ஸ்திரீயின் வித்தாயும், ராஜரீக ஆசாரியர்களும், அவருடைய பொக்கிஷமான உடைமையும், ஜாதிகளுக்குள்ளே அவருடைய முதற்பேறானவர்களுமாய் இருந்தார்கள். அவர்கள் பலுகிப் பெருகவும் தேவனுடைய ராஜ்யத்திற்கு சேவை செய்கிறவார்களாக பூமியை ஆளவும் வேண்டும். இஸ்ரவேலர்கள் மீண்டும் மீண்டும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கத் தவறிவிட்டனர், தேவன் அவர்களுக்கு எதிராக கடுமையான நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தார், ஆனால் தேவன் இஸ்ரவேலர்களின் இந்தப் பாத்திரத்தை ஒருபோதும் ரத்து செய்யவில்லை. வேதாகமம் முழுவதிலும், நாம் பார்க்கப்போகிறபடி, எல்லா தேசங்களையும் தம்முடைய சேவையில் வழிநடத்திச் செல்ல இஸ்ரவேலருக்கு தேவன் உறுதியளித்திருந்தார்.

இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரம் முழுவதிலும் தேவனுடைய ராஜ்யம் எப்படி விரிவடைந்தது என்பதைப் பார்க்க, நாம் மீண்டும் மூன்று தலைப்புகளைப் பார்ப்போம். முதலாவதாக, ராஜ்யத்தின் இடம் அல்லது இருப்பிடத்தை ஆராய்வோம். இரண்டாவதாக, இஸ்ரவேல் தேசத்திலுள்ள ராஜ்யத்தின் ஜனங்களைப் பார்ப்போம். மூன்றாவதாக, இஸ்ரவேலில் ராஜ்யத்தின் வளர்ச்சியை நாம் பார்ப்போம். தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## இடம்

தேவன் முதலில் ஆதாமையும் ஏவாளையும் பூமியில் வைத்தபோது, அவர்களை ஒரு விசேஷமான இடத்தில், அதாவது ஏதேன் தோட்டத்தில் வைத்தார். ஆனால் உலகம் முழுவதிலும் தம்முடைய சித்தத்தை ஸ்தாபிப்பதன் மூலம் தமது சாயல்களாக சேவை செய்யும்படியும் அவர் அவர்களுக்கு கட்டளையிட்டார். இப்போது நாம் பார்க்கப் போகிறபடி, ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியையும் தேவன் தேர்ந்தெடுத்தபோது, ஏதேனின் சுற்றுப்புறத்தை மீண்டும் ஒரு முறை பார்வையிட்டு தங்களை ஒழுங்குபடுத்தவும் பின்னர் அங்கிருந்து மனிதகுலத்தின் அசல் கட்டளையை நிறைவேற்றுவதற்காக அவர் அவர்களை அழைத்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமம் 12:1-3 தேவன் இஸ்ரவேலின் தகப்பனாகிய ஆபிரகாமை தம்முடைய விசேஷ ஊழியக்காரனாக முதலில் அழைத்தபோது விவரிக்கிற விதத்தை கவனியுங்கள். தேவன் இவ்வாறு சொன்னார்:

> கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதியாகமம் 12:1-3).

இந்த வேத பகுதியின் புவியியல் மையத்தை கவனியுங்கள். மெசொப்பொத்தாமியாவிலுள்ள தன் தகப்பனுடைய வீட்டை விட்டு, ஆபிரகாம் இதுவரை பார்த்திராத ஒரு தேசத்திற்குக் குடிபெயரும்படி ஆபிரகாமை தேவன் அழைத்தார்.

தேவன் ஆபிரகாமை மெசொப்பொத்தாமியாவிலுள்ள ஊர் என்னும் இடத்திலிருந்து ஆரானுக்குக் கொண்டுபோனார். பின்னர், தேவன் ஆபிரகாமை ஆரானிலிருந்து நாம் அடிக்கடி "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம்" என்று அழைக்கும் கானான் தேசத்திற்கு அழைத்தார். ஆபிரகாம் கானானுக்கு வந்தபோது, அவனுடைய சந்ததியார் அந்த இடத்தைத் தங்கள் நிலைத்திருக்கும் தாயகமாகச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று தேவன் உறுதிப்படுத்தினார். அந்த நேரத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் இஸ்ரவேலின் ராஜ்ய சேவைக்கான களமாக மாறியது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு ஆபிரகாம் அழைக்கப்பட்டது, இஸ்ரவேலின் சரித்திரத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தை குறைந்தபட்சம் இரண்டு வழிகளில் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. முதலாவதாக, ஆபிரகாமையும் அவருடைய சந்ததியினரையும் அவருடைய ராஜ்யத்தின் அசல் புவியியல் மையத்தில் அவருக்குச் சேவை செய்ய தேவன் அழைத்தார். இரண்டாவதாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைகளுக்கு அப்பால் தம்முடைய ராஜ்யத்தின் புவியியல் விரிவாக்கத்தை மேற்கொள்ள தேவன் இஸ்ரவேலரை அழைத்தார். முதலாவதாக, ஆபிரகாமையும் அவருடைய சந்ததியினரையும் அவருடைய ராஜ்யத்தின் அசல் புவியியல் மையத்தில் அவருக்குச் சேவை செய்ய தேவன் அழைத்ததைப் பற்றிப் பார்க்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அசல் மையம்

ஒரு சில கணங்களுக்கு முன்பு, தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யத்தின் அசல் மையம் ஏதேன் தேசமும் அதற்குள் இருக்கும் பரிசுத்த தோட்டமும்தான் என்பதை நாம் கண்டோம். துரதிர்ஷ்டவசமாக, பல வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் ஏதேன் பாரசீக வளைகுடாவுக்கு அருகிலுள்ள கீழ் மெசொப்பொத்தாமியாவில் எங்கோ இருப்பதாக தவறாக அனுமானித்துள்ளனர். ஏதேன் தேசமாக எவ்வளவு பெரிய பிரதேசம் கருதப்பட்டது என்பது நமக்குத் தெரியாது. ஃபெர்டைல் க்ரெஸெண்ட் என்று நாம் இப்போது அழைப்பது முழுவதிலும் அது பரவியிருக்கலாம். ஆனால் ஆதியாகமம் புத்தகமே தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தோடு ஏதேன் தேசத்தையும் ஏதேன் தோட்டத்தையும் நெருக்கமாக தொடர்புபடுத்துகிறது.

இந்த புவியியல் நோக்குநிலை ஆதியாகமம் 2:10-14 இல் தெளிவாகிறது, அங்கு தேவன் ஏதேனின் எல்லைகளை விவரித்தார்:

> தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர். அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்; இரண்டாம் ஆற்றுக்குக் கீகோன் என்று பேர். அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர், நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர் (ஆதியாகமம் 2:10-14).

ஏதேனுடன் நான்கு பழமையான நதிகள் தொடர்புடையவை என்பதை இங்கே கவனியுங்கள். முதல் இரண்டு ஆறுகளுக்கு பைசோன் மற்றும் கீகோன் என்று பேர். இந்த ஆறுகள் எங்கு அமைந்துள்ளன என்று அறிஞர்கள் இன்னும் விவாதிக்கின்றனர். ஆனால் இங்கே, அவைகள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் தென்மேற்கில் உள்ள ஆவிலா மற்றும் எத்தியோப்பியா தேசத்துடன் தொடர்புடையவைகள். மற்ற இரண்டு ஆறுகளான இதெக்கேல் மற்றும் ஐபிராத்து நவீன சிரியாவின் மலைப்பிரதேசங்களிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுகின்றன. ஏதேன் நதிகளின் இருப்பிடங்களைப் பற்றி இவ்வளவு புரிந்துகொள்வது முக்கியமானது, ஏனென்றால், பரந்த அளவில் சொல்வதானால், இந்த இடங்கள் ஆதியாகமம் புஸ்தகத்தில் பிற்காலத்தில் ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்த தேசத்துடன் தொடர்புடைய நதிகளுடன் தொடர்புடையவை. ஆதியாகமம் 15:18 யையும் தேவன் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தை விவரித்த விதத்தையும் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதுமான தேசத்தை நான் உன் சந்ததிக்குக் கொடுப்பேன் (ஆதியாகமம் 15:18).

நாம் இங்கே பார்க்கிறபடி, எகிப்தின் ஆறும் ஐப்பிராத்து நதியும் இஸ்ரவேலின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைகளைக் குறித்தன.

பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் "எகிப்தின் நதி" நைல் நதி அல்ல என்றும், அது வடகிழக்கு எகிப்தில் உள்ள பல ஆறுகள் அல்லது ஓடைகளில் ஒன்றாகும் என்பதை சரியாக ஒப்புக்கொள்கிறார்கள். இதற்கும் அப்பால், நவீன மேற்கு சிரியாவின் மேல் நதியான ஐப்பிராத்து நதி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் வடகிழக்கு எல்லையைக் குறித்தது. வேதாகம வரலாற்றின் பிற்பகுதியில், இந்த ஆறுகள் தாவீது மற்றும் சாலொமோனின் ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேலின் நிலங்களின் பரப்பளவைக் குறித்தன.

நாம் பார்க்கிறபடி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் புவியியல் எல்லைகள் ஏறக்குறைய ஏதேன் தேசத்தின் எல்லைகளுக்கு இணையாக இருக்கின்றன. எனவே, மற்ற வேத பகுதிகள் சுட்டிக்காட்டுவது போல, தேவன் ஆபிரகாமை கானானுக்கு அழைத்தபோது, ஆதாமும் ஏவாளும் தேவனுடைய ராஜ்யத்தை முதலில் சேவிக்கத் தொடங்கிய பூமியின் பூகோளவியலின் அசல் மையப்பகுதியான ஏதேனுக்கு அவரை மீண்டும் அழைத்தார்.

தேவன் முதலில் ஆபிரகாமை அழைத்தார், பின்னர் மோசேயை தேவனுடைய ராஜ்யத்தின் அசல் புவியியல் மையத்திற்குக் கொண்டுவந்தார் என்பதைப் புரிந்துகொள்ள ஏதேனின் இடம் நமக்கு உதவுகிறது. அது மட்டுமல்லாமல், இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம், இஸ்ரவேலின் மூலம் தேவனுடைய ஆட்சியின் புவியியல் ரீதியான விரிவாக்கத்திற்கான தொடக்கப்புள்ளியாக பூமியின் எல்லைகள் வரை இருந்தது என்பதையும் அது குறிக்கிறது.

## விரிவடைதல்

ஆதியாகமம் 12:3-ல் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வது மிகப் பெரிய நோக்கத்திற்காக இருந்தது. தேவன் இவ்வாறு சொன்னார்:

> உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதியாகமம் 12:3).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வேத பகுதியில், ஆபிரகாமும் அவனுடைய சந்ததியினரும் எல்லா தேசங்களிலும் ஏற்படுத்தும் தாக்கத்தை தேவன் நேரடியாக ஆபிரகாமின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். ஆபிரகாமுக்கு அவர்கள் செய்யும் காரியத்திற்கு பதிலளிக்கும் விதமாக மற்ற தேசங்களை ஆசீர்வதிப்பதாகவும் சபிப்பதாகவும் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். ஆனால் இந்த இருமடங்கான செயல்முறையின் இறுதி முடிவைக் கவனியுங்கள். ஆபிரகாமும் அவனுடைய சந்ததியும் பூமியின் எல்லாக் குடும்பங்களுக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்தார். அதனால்தான், ரோமர் 4:13-ல் அப்போஸ்தலனாகிய பவுல் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது கிடைத்தது (ரோமர் 4:13).

ஆதாமும் ஏவாளும் முழு பூமியையும் நிரப்பவும், அதன் மீது ஆதிக்கம் செலுத்தவும் அழைக்கப்பட்டனர், ஆனால் பாவம் தேவனை சேவித்தவர்களுக்கும் சேவிக்காத்தவர்களுக்கும் இடையில் மனித இனத்தை பிரித்திருந்தது. ஆனால் தேவன் ஆபிரகாமையும் இஸ்ரவேலையும் பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும் தம்முடைய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரத் தெரிந்துகொண்டார். கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம், ஆபிரகாமின் பரிபூரண குமாரனாகிய இயேசுவின் மூலமாக இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது என்பதை அறிவோம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைவிட அதிகமாக சுதந்தரிப்பதன் மூலம் தேவனுடைய நோக்கங்களுக்கு சேவை செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்ததை இஸ்ரவேல் ஜனங்கள் நன்கறிந்திருந்தார்கள். மோசேயின் நாட்களில், இரண்டரை கோத்திரங்கள் யோர்தானுக்குக் கிழக்கே இருக்கிற தேசங்களை ஆக்கிரமிக்க அனுமதி பெற்றன. தாவீது, சாலொமோன் மற்றும் தாவீதின் வம்சத்தில் வந்த மற்ற ராஜாக்கள் வடக்கேயும் கிழக்கேயும் தெற்கேயும் இஸ்ரவேலின் எல்லைகளை விரிவுபடுத்தினார்கள். இஸ்ரவேலர்கள் சிறைப்பட்ட போதுகூட, தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குத் திரும்புவது மட்டுமல்லாமல், மேசியா ஒரு நாள் தேவனுடைய ராஜ்யத்தைப் பூமியின் கடையாந்தரங்களுக்குப் பரப்புவதில் அவர்களை வழிநடத்துவார் என்று அவர்களுக்கு உறுதியளித்தனர்.

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் நாட்களில் தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தை மனதில் கொண்டு, இந்த நேரத்தில் இருந்த ராஜ்யத்தின் மக்களைக் குறித்துப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# மக்கள்

தேவன் மனிதர்களைத் தம்முடைய ராஜரீக ஆசாரிய சாயல்களாகப் படைத்ததன் மூலம் அவர்களை மகிமைப்படுத்தினார் என்பதை நாம் முன்பு பார்த்தோம். ஆதியாகமம் 9:6 மற்றும் யாக்கோபு 3:9 போன்ற வசனங்கள், தேவனுடைய ராஜ்ய நோக்கங்களை அவருடைய சாயல்களாகச் சேவிக்கும் கனமும் பொறுப்பும் எல்லா மனிதர்களுக்கும் இன்னும் இருக்கிறது என்பதைக் குறிக்கின்றன. ஆயினும்கூட, ஆபிரகாமின் சந்ததிகளான இஸ்ரவேல் ஜனங்கள், உலகெங்கிலும் தேவனுடைய ஆட்சியைப் பரப்புவதில் வழிநடத்துவதில் ஒரு சிறப்புப் பங்கைக் கொண்டிருப்பார்கள் என்று தேவன் தம்முடைய நிகரற்ற ஞானத்தில் கட்டளையிட்டார். இஸ்ரவேலின் வரலாறு சிக்கலானது, ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் இந்த ராஜ்ய ஊழியத்தை நிறைவேற்றுவார்கள் என்பதை தேவன் எப்படி உறுதிப்படுத்தினார் என்பதைச் சுருக்கமாகச் சொல்ல அது உதவும்.

இஸ்ரவேலின் சரித்திரத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் ஜனங்களுடன் தொடர்புடைய மூன்று காரியங்களை நாம் பார்ப்போம்: முதலாவதாக, இஸ்ரவேலை ஒரு விசேஷ ஜனமாகத் தேர்ந்தெடுப்பது; இரண்டாவதாக, ஆசாரியர்களின் ராஜ்யமாக இஸ்ரவேல் ஜனங்களின் உருவாக்கம்; மூன்றாவதாக, இஸ்ரவேலை வழிநடத்த அதிகாரப்பூர்வ ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்களுக்கு தேவன் கொடுத்த பதவி. முதலாவதாக இஸ்ரவேலை தேவனுடைய விசேஷித்த ஜனங்களாகத் தேர்ந்தெடுப்பதைக் கவனியுங்கள்.

## இஸ்ரவேலை தேர்ந்தெடுத்தல்

நாம் முன்பு பார்த்தபடி, ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்திற்குப் பிறகு, சாத்தானின் நோக்கங்களுக்காக சேவை செய்தவர்களாகிய சர்ப்பத்தின் வித்துக்கும் தேவனுடைய நோக்கங்களுக்காக சேவை செய்த ஸ்திரீயின் வித்துக்கும் இடையே மனித இனம் பிரிந்தது. ஆதியாகமம் 5 இன்படி, ஆதாமின் மூன்றாவது குமாரனாகிய சேத், நீதியுள்ள நோவாவையும் அவருடைய குமாரர்களையும் மருமகள்களையும் வழிநடத்திய உண்மையுள்ள மனித குலத்தின் தகப்பனானான். நோவாவுக்கு சேம், காம் மற்றும் யாப்பேத் என்கிற மூன்று குமாரர்கள் இருந்தார்கள். ஆனால் இந்த மூவரில், சேமும் அவனுடைய சந்ததியும் தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்களாயிருந்தார்கள். ஆதியாகமம் புத்தகத்தில் உள்ள இந்த வம்ச வரலாற்று தகவல்கள் அனைத்தும், இஸ்ரவேலை அவர் தெரிந்துகொண்ட மக்களாக தேவன் தேர்ந்தெடுத்ததன் பின்னணியை விளக்குவதற்காக வடிவமைக்கப்பட்டன.

சேமின் வம்சத்திலிருந்து ஒரு மனிதனை, அதாவது இஸ்ரவேலின் முற்பிதாவான ஆபிரகாமை ஸ்திரீயின் வித்தாக சேவை செய்ய தேவன் தேர்ந்தெடுத்தார். ஆதியாகமத்தில் உள்ள வம்ச வரலாறு ஆபிரகாமிற்கு ஈசாக்கு என்ற அற்புதமான குமாரன் இருந்தான் என்பதை வெளிப்படுத்துகிறது, ஈசாக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வழியைத் தொடர்ந்தான். அப்பொழுது யாக்கோபு என்றழைக்கப்பட்ட ஈசாக்கின் குமாரனாகிய இஸ்ரவேல் விசேஷமாக மகிமைப்படுத்தப்பட்ட தேவனுடைய சாயலானான். இறுதியாக, யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர் இருந்தார்கள், யோசேப்பும் அவன் சகோதரருமாகிய, இந்த பன்னிரண்டு குமாரரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிதாக்களாயிருந்தார்கள். மனிதகுலத்தின் எல்லா தேசங்களிலும், இஸ்ரவேலின் கோத்திரங்கள் தேவனுடைய விசேஷித்த ஜனங்களாயும் அவருடைய ராஜ்யத்தின் ஜனங்களாயுமிருந்தார்கள்.

மோசேயின் நாட்களில், இஸ்ரவேல் கோத்திரங்களை அவருடைய விசேஷித்த ஜனங்களாக தேவன் தேர்ந்தெடுத்தது முன்னோக்கி நகர்ந்தது. தேவன் இஸ்ரவேலின் கோத்திரங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டுவந்து, தம்முடைய ராஜ்யத்தை உலகம் முழுவதிலும் பரப்பும் தம்முடைய இலக்கை நிறைவேற்றும்படி அவர்களை ஒரு தேசமாக, ஆசாரியர்களின் ராஜ்யமாக, ஒரு தேசமாக உருவாக்கினார்.

## ஆசாரியர்களின் ராஜ்யம்

யாத்திராகமம் 19:4-6-ல், தேவன் இஸ்ரவேலருக்கு இந்த நோக்கத்தை நிச்சயமான சொற்களில் அறிவித்தார். சீனாய் மலையில், அவர் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்:

> நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:4-6).

இங்கே நாம் இஸ்ரவேல் ஒரு "பரிசுத்த தேசமாக" இருக்க வேண்டும் என்று பார்க்கிறோம் - அதாவது, விசேஷித்த, பிரிக்கப்பட்ட, மற்ற எல்லா மக்களிடமிருந்தும் தேவனுடைய பொக்கிஷமாக வேறுபடுத்தப்பட்ட தேசமாயிருக்கிறது. தம்முடைய பரிசுத்த ஜனங்களாக, தேவன் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் "ஆசாரிய ராஜ்யம்" என்று அழைத்தார், அல்லது "ராஜரீக ஆசாரியக் கூட்டம்" என்று மொழிபெயர்க்கப்படலாம் என்று அழைத்தார்.

> யாத்திராகமம் 19:6 மற்றும் குறிப்பாக "ராஜரீக ஆசாரியர்கள்" என்ற சொற்றொடர் ஆதியாகமம் 1-ல், ஆணும் பெண்ணுமாக மனிதவர்க்கம் அழைக்கப்பட்டதன் எதிரொலியாக

> செயல்படுகிறது. அவர்கள் ராஜாவாக இருக்கவும், சிருஷ்டிப்பு மீது ஒரு ராஜ பாத்திரம் கொண்டிருக்கவும், சிருஷ்டிப்பு மீது ஆட்சி செய்யவும் அழைக்கப்பட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். மேலும், உடனடி சூழலில், "ராஜரீக ஆசாரிய கூட்டம்" என்ற சொற்றொடருக்குப் பிறகு "ஒரு பரிசுத்த ஜனம்" என்ற சொற்றொடர் உள்ளது. இஸ்ரவேல் பரிசுத்த தேசமாயிருக்க வேண்டும்; ஆசாரியர்கள் பரிசுத்தராக இருந்து, தேவனுடைய பரிசுத்தத்தைப் பிரதிபலிக்க வேண்டும், இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தில் உள்ள பல்வேறு சட்டங்கள் மூலம் தங்களை பரிசுத்தம் செய்வதன் மூலம் தேவனுடைய பரிசுத்தத்தையும் பிரதிபலிக்க வேண்டும்.
>
> – Dr. டக்ளஸ் கிராப்

இஸ்ரவேலின் இந்தப் பதவி, ஆதியிலே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சாயலாக வைத்திருந்த பாத்திரத்தை மேலும் அதிகரிக்க இஸ்ரவேலர் அழைக்கப்பட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. இஸ்ரவேலின் கோத்திரங்கள் ஆசாரியர்களின் ராஜ்யமாக வளர்ந்தது, பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை முன்னோக்கி நகர்த்த அவர்களுக்கு உதவியது.

இஸ்ரவேலரை தேவன் தேர்ந்தெடுத்தது, ராஜரீக ஆசாரியர்களாக ஆவதற்கான சிலாக்கியங்களையும் பொறுப்புகளையும் தம்முடைய மக்களுக்குக் கொடுத்தபோதிலும், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்களின் விசேஷித்த பதவிகளில் இருப்பதற்கு தேவன் சில இஸ்ரவேலர்களை அழைத்தார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள்

ஆரோனும் அவன் சந்ததியும் ஆசாரிப்பு கூடாரத்திலும், பின்பு ஆலயத்திலும் இருக்கிற தேவனுடைய விசேஷ பிரசன்னத்திற்குள் தேசத்தை வழிநடத்த இஸ்ரவேலின் அதிகாரப்பூர்வ ஆசாரியர்களாக ஆனார்கள். அவர்கள் இஸ்ரவேலரை ஆராதனையிலும், பலி செலுத்துதலிலும், ஜெபங்களிலும், துதியிலும் வழிநடத்தினார்கள். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் இருந்து இஸ்ரவேலருக்குப் போதித்தார்கள். சவுலின் காலத்திற்குப் பிறகு, தேவன் தாவீதையும் அவன் சந்ததியையும் இஸ்ரவேலின்மேல் ராஜாக்களாகச் சேவிக்கும்படி நியமித்தார். தாவீதின் வம்சம் தேவனுடைய உண்மையான ஆராதனையை மேற்பார்வையிடுவதற்கு மட்டுமல்லாமல், இஸ்ரவேலிலும் பூமியிலுள்ள மற்ற தேசங்களிலும் தேவனுக்கு மக்களை கீழ்படிய வைக்க நியமிக்கப்பட்டது. இந்தக் காலத்திலிருந்து தாவீதின் வீடு தேவனுடைய ராஜ்யத்தை உலகளாவிய விரிவாக்கத்திற்கு வழிநடத்தியது. நிச்சயமாகவே, புதிய ஏற்பாடு தாவீதின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குமாரனாகிய இயேசு இன்று தேவனுடைய ஜனங்களின்மேல் பெரிய பிரதான ஆசாரியராகவும் ராஜாவாகவும் இருக்கிறார் என்று மிகவும் வலியுறுத்துகிறது. இந்த அலுவல்கள் நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட அனைத்தையும் அவர் மட்டுமே நிறைவேற்றுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் ராஜ்யத்தின் இடத்தையும் ஜனங்களையும் மனதில் கொண்டு, இஸ்ரவேல் தேசத்தின் மூலம் நடந்த ராஜ்யத்தின் வளர்ச்சியை நாம் குறிப்பிட வேண்டும்.

## வளர்ச்சி

பழைய ஏற்பாட்டில் இருக்கிற இஸ்ரவேலின் கதை நேர்மறையான சாதனைகள் மற்றும் மோசமான தோல்விகள் இரண்டையும் உள்ளடக்கியது. ஏறக்குறைய இஸ்ரவேலின் ஒவ்வொரு சந்ததியும் ஏதோ ஒரு விதத்தில் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து, தேவனுடைய தற்காலிக நியாயத்தீர்ப்புகளை அடைந்து பாடுபட்டார்கள். ஆனால் மீண்டும் மீண்டும், தேவன் இஸ்ரவேலை மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தி, அவர்களைப் புதுப்பித்தார். ஆயினும்கூட, பழைய ஏற்பாட்டின் முடிவில், இஸ்ரவேலின் பாவங்கள் மிகவும் பெரியதாகி, தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திலிருந்து வேறு தேசத்தில் போய் அவர்கள் சிறைப்படும்படியான ஒரு பெரிய சாபத்தைக் கொண்டுவந்தது. தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்புவதில் அவர்களை வழிநடத்துவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களாக இஸ்ரவேலருக்குத் தாய்நாடும் இல்லை, ஆசாரியத்துவமும் ஆலயமும் இல்லை, தாவீதின் குமாரனும் இல்லை. ஆயினும், இந்த பயங்கரமான நிலைமைகள் இருந்தபோதிலும், ஒரு நாள் தாவீதின் உன்னத குமாரன் எழுந்து, தேவனுடைய ராஜ்யத்தைப் பூமியின் எல்லைகள் வரை பரப்புவதில் இஸ்ரவேலரை வழிநடத்துவார் என்று இஸ்ரவேலருக்கு தேவனுடைய தீர்க்கதரிசிகள் உறுதியளித்தார்கள்.

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியில் மூன்று முக்கிய படிகளை முன்னிலைப்படுத்த மட்டுமே நமக்கு நேரம் இருக்கிறது: வாக்குத்தத்தத்தின் காலம்; எகிப்தை விட்டு இஸ்ரவேலர்கள் வெளியேறுதல் மற்றும் கானான் தேசத்தை கைப்பற்றுதல்; மற்றும் இஸ்ரவேல் ஒரு முழு பேரரசாக ஆன நேரம். தேவனுடைய வாக்குத்தத்த காலத்தில் என்ன நடந்தது என்பதை முதலில் பார்ப்போம்.

### வாக்குத்தத்தம்

வாக்குத்தத்தத்தின் காலத்தைப் பற்றி நாம் பேசும்போது, இஸ்ரவேலின் பிதாக்களின் தலைமுறைகளை நாம் மனதில் கொண்டிருக்கிறோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யாக்கோபின் குமாரர் ஆகியோரின் நாட்களில், தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி தேவன் அநேக வாக்குத்தத்தங்களை கொடுத்தார். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாக்குத்தத்தங்கள் ஏதேன் தோட்டத்தில் தேவன் தம்முடைய சாயலுக்கு முன்பாக வைத்த அசல் இலக்குகளுக்கு ஒத்திருக்கும் இரண்டு அடிப்படை வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன: இஸ்ரவேலின் பெருக்கம் மற்றும் இஸ்ரவேலின் ஆளுகையைப் பற்றிய வாக்குத்தத்தங்கள்.

முதலாவதாக, தேவன் ஆதாமையும் ஏவாளையும் அவர்களின் சந்ததிகளால் பூமியை நிரப்ப அழைத்ததைப் போலவே, அவர்களுடைய சந்ததிகள் ஒரு நாள் எண்ணிக்கைக்கு அதிகமாகப் பெருகுவார்கள் என்று இஸ்ரவேலின் பிதாக்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்தார். ஆதியாகமம் 15:5 இல் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை கவனியுங்கள்:

> அவர் அவனை வெளியே அழைத்து: 'நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு" என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்றார் (ஆதியாகமம் 15:5).

ஆபிரகாமும் அவனுடைய சந்ததியினரும் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போல எண்ணற்றவர்களாக இருப்பார்கள் என்று இங்கே தேவன் வாக்குத்தத்தம் செய்தார். அதனால்தான் ஆதியாகமம் புத்தகம் சாராள் மூலம் பிறந்த ஆபிரகாமின் அற்புத குழந்தையான ஈசாக்கின் பிறப்பை வலியுறுத்துகிறது. அதனால்தான் வேதாகம கதை ஈசாக்கின் குமாரன் யாக்கோபையும் யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களையும் மையமாகக் கொண்டுள்ளது. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அவர் கொடுத்த அசல் கட்டளையை நிறைவேற்ற இஸ்ரவேலரை தேவன் நியமித்ததால், இஸ்ரவேலின் எண்ணிக்கை அதிகரிப்பு இஸ்ரவேலின் பிதாக்களின் காலத்தில் ஒரு மையக் கருப்பொருளாக இருக்கிறது.

இரண்டாவதாக, முற்பிதாக்களை ப் பற்றிய வேதாகமக் கதைகளும் பூமியின் மீது இஸ்ரவேலின் ஆளுகையில் கவனம் செலுத்துகின்றன. தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் வைத்தது போலவே, ஆபிரகாமின் சந்ததியினர் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்தார். ஆதியாகமம் 15:7 இல் நாம் வாசிப்பது போல, தேவன் இவ்வாறு ஆபிரகாமிடம் கூறினார்:

> இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே (ஆதியாகமம் 15:7).

அதனால்தான் ஆபிரகாம் கானானில் ஒரு அடையாளப்பூர்வ நிலத்தைத் தன் குடும்பத்திற்காக அடக்கம் செய்யும் இடமாக வாங்கினார் என்பதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகமம் வெளிப்படுத்துகிறது. யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவிடமிருந்து பெரும் ஆபத்தை எதிர்கொண்டபோதும்கூட, தன் தாய்நாட்டிற்குத் திரும்பும்படி தேவன் ஏன் கட்டளையிட்டார் என்பதையும் அது விளக்குகிறது.

தன் சகோதரர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குத் திரும்புவார்கள் என்று யோசேப்பு உறுதியளித்ததோடு ஆதியாகமம் புஸ்தகம் நிறைவடைகிறது. அவர் இஸ்ரவேலை ஒரு பெரிய தேசமாகப் பெருக்கி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின்மேல் இஸ்ரவேலுக்கு ஆளுகையைக் கொடுப்பேன் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்த ஒரு காலகட்டம்தான் முற்பிதாக்களின் காலம் ஆகும்.

இஸ்ரவேலின் பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்த காலத்திற்குப் பிறகு, தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சி யாத்திராகமம் மற்றும் கானானை இஸ்ரவேலர் சுதந்தரித்த காலத்திலும் தொடர்ந்தது.

## யாத்திராகமம் மற்றும் கானானை சுதந்தரித்தல்

மோசேயும் இஸ்ரவேலர்களும் செங்கடலைக் கடந்தபோது, யாத்திராகமம் 15:1-18 இல் தேவனைப் புகழ்ந்து பாடினார்கள் என்பதை நீங்கள் நினைவுகூரலாம். ஆதாம் மற்றும் ஏவாளின் உண்மையான ஊழியத்தை பூமியில் விரிவுபடுத்துவதன் மூலம், தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டார் என்ற உண்மையை இந்த வேத பகுதி எடுத்துக்காட்டுகிறது. யாத்திராகமம் 15:13 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர் (யாத்திராகமம் 15:13).

இஸ்ரவேலர்களை தம்முடைய ”பரிசுத்த வாசஸ்தலத்தை” நோக்கி வழிநடத்திக்கொண்டிருந்தபடியால், அவர்கள் அவரைத் துதித்தார்கள் என்பதைக் கவனியுங்கள்.

ஏதேனைப் போலவே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமும் பூமியில் தேவனுடைய விசேஷித்த பரிசுத்த பிரசன்னத்தின் மையமாக இருக்க வேண்டும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இதற்கும் மேலாக, யாத்திராகமம் 15:13 இல் உள்ள வார்த்தை ”வழிநடத்தப்பட்ட” - Nahal (נָהַל) என்று எபிரெய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த வார்த்தை ஆடுகளை வழிநடத்தும் மேய்ப்பர்களைக் குறிக்க பல வேத வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகப் பண்டைய கிழக்கு தேசங்களிலும் வேதாகமத்திலும் ராஜாக்களின் நடவடிக்கைகளை விவரிக்க இது போன்ற மேய்ப்பரின் பிம்பங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. தேவன் தம்முடைய ஜனங்களை

அவர்களுடைய மேய்ப்பனாகிய ராஜாவாகத் தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்தை நோக்கி வழிநடத்தினார். தேவனுடைய ராஜ்யம் மற்றும் ராஜ்யத்தின் கருப்பொருள் யாத்திராகமம் 15:17-18 இல் வெளிப்படையாகத் தோன்றுவதில் ஆச்சரியமில்லை. செங்கடல் சம்பவத்தில் பாடலின் முடிவில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர். கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரீகம் பண்ணுவார் (யாத்திராகமம் 15:17-18).

இந்த வசனங்களின்படி, தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய பரிசுத்த பர்வதத்தை நோக்கி அழைத்துச் சென்றார், இது பிற்காலத்தில் எருசலேம் என்று வெளிப்படுத்தப்பட்ட பரிசுத்த ஸ்தலமாகும். அந்த மலைப் பகுதி தேவனுடைய "வாசஸ்தலமாக" இருக்கும் - எபிரெய மொழியில் *யாஷவ்* (יָשַׁב) - இந்த சொல் பெரும்பாலும் ஒரு ராஜாவின் சிங்காசனத்தைக் குறிக்கிறது. இந்த வேத பகுதியில் உள்ள மற்ற ராஜ நோக்கத்தின் வெளிச்சத்தில், இந்த இடம் தேவனுடைய ராஜ சிங்காசனத்தின் இடமாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வது சிறந்தது. அதனால்தான் வசனம் 18 உடனடியாக வெளிப்படையான ராஜரீக கலைச்சொற்களுடன் தேவனைத் துதிக்கிறது, அங்கிருந்து, "கர்த்தர் என்றென்றைக்கும் அரசாளுவார்" என்று கூறுகிறது.

> இஸ்ரவேலர் தேவனுடைய இரட்சிப்பை அனுபவித்து, செங்கடலில் வெற்றியின் இந்தப் பாடலைப் பாடுகிறார்கள்: "கர்த்தர் என்றென்றைக்கும் அரசாளுவார்." ஆனால் இந்த ராஜா ஒரு வித்தியாசமான வகையைச் சேர்ந்தவர் ... தொலைதூரத்தில் வாழும் ராஜாக்களைப் போலல்லாமல், அதாவது நீங்கள் ஒரு நாணயத்தில் அவரை தங்கள் முகத்தின் மூலம் மட்டுமே சந்திக்கலாம் - அல்லது நவீன உலகில், தொலைக்காட்சிப்பெட்டியில் அல்லது செய்தித்தாள்களில் அவர்களின் படத்தை பார்க்கலாம் - இஸ்ரவேலின் தேவனும் கர்த்தருமானவர் உண்மையான ராஜாவாக இருக்கிறார். அவருடைய மக்களை அவரது பரிசுத்த மலையான சீனாய் மீது வந்து அவருடன் இருக்க அழைக்கிறார், பின்னர் இன்னும் ஆழமாக ஒரு வழிமுறையை ஏற்படுத்துகிறார், அது ஆசாரிப்பு கூடாரம் ஆகும், அங்கு தேவன் உண்மையில் இறங்கி வந்து என்றென்றைக்கும் தம்முடைய ஜனங்களின் நடுவிலே நிலைத்திருக்க முடியும்.

– Dr. பிரையன் டி. ரஸ்ஸல்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு மேய்ப்பனைப் போல தேசத்தை வழிநடத்துவதன் மூலம் தேவன் இஸ்ரவேலின் ராஜாவாக செயல்பட்டபோது, பூமியில் தம்முடைய ராஜ சிங்காசனத்தைச் சுற்றி அவர்களை ஸ்தாபிக்க இதைச் செய்தார். எகிப்தை விட்டு வெளியேறி கானான் தேசத்தை சுதந்தரிப்பதன் நோக்கம் என்னவென்றால் தேவனுடைய ஆட்சியையும், அவருடைய ராஜரீகத்தையும், பூமியில் அவருடைய ராஜ்யத்தையும் மறுபடியும் ஸ்தாபிப்பதே ஆகும்.

வாக்குத்தத்தம், இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறுதல் மற்றும் கானான் தேசத்தை சுதந்தரித்தல் போன்ற காலங்களில் தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சியைப் பற்றி பார்த்த பிறகு, நாம் ஒரு தேசமாக இஸ்ரவேலின் வரலாற்றின் மூன்றாவது கட்டமான பேரரசைப் பற்றிப் பார்க்க வேண்டும். தாவீது மற்றும் சாலொமோனின் தலைமையின் கீழ், இஸ்ரவேல் தேசமானது தேவனுடைய ஜனங்களை ஆராதனையிலும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியும்படிக்கும் வழிநடத்திய ஒரு மனித ராஜாவுடன் ஒரு உண்மையான ராஜ்யமாக ஆனது.

## பேரரசு

துரதிர்ஷ்டவசமாக, 1 சாமுவேல் 8 இன் அடிப்படையில், பல சுவிசேஷக வியாக்கியான அறிஞர்கள் இஸ்ரவேலர் ஒரு மனித ராஜாவைக் கொண்டிருக்க தேவன் ஒருபோதும் திட்டமிடவில்லை என்று தவறாக நம்புகிறார்கள். ஆனால் பிதாக்களின் நாட்களிலிருந்து, இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் வளர்க்க ஒரு மனித ராஜாவை சரியான நேரத்தில் கொண்டிருப்பார்கள் என்று தேவன் வெளிப்படுத்தினார். இந்த மனித ராஜா தாவீதின் சந்ததியாக இருப்பார் என்று தேவன் தீர்மானித்தார். அவர் இஸ்ரவேல் தேசத்தை வழிநடத்துவார், இறுதியில் பூமியில் உள்ள ஒவ்வொரு தேசத்தையும் வழிநடத்துவார். தேவனுடைய ராஜ்யத்தைப் பூமியின் கடையாந்தரங்களுக்குப் பரப்புவது என்கிற மனிதகுலத்தின் அசல் நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர் அவர்களை வழிநடத்துவார். நிச்சயமாகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்திருக்கிறபடி, இயேசு தாவீதின் வம்சத்திலிருந்து வருகிற பரிபூரண நீதியுள்ள ராஜாவாக இருக்கிறார், அவர் பரலோகத்தில் இருப்பதைப் போல தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவருவார்.

வருத்தப்படும் விதமாக, இஸ்ரவேலின் ராஜாக்கள் தேவனிடமிருந்து வந்த இந்த அழைப்பை நிறைவேற்றத் தவறிவிட்டனர். சொல்லப்போனால், தாவீதின் வம்சம் உட்பட இஸ்ரவேலின் ராஜாக்களில் அநேகர், இஸ்ரவேல் ஜனங்களை தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண வழிநடத்தினார்கள் என்பதை 1 மற்றும் 2 இராஜாக்கள் தெளிவாக்குகின்றன. இந்தக் கலகங்கள் இறுதியில் இஸ்ரவேலர்கள் சிறைப்பட்டுப்போக காரணமாயின. ஆயினும்கூட,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய கிருபையினால், தாவீதும் அவனுடைய குமாரனாகிய சாலொமோனும் செய்த ஆட்சிகள் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் கணிசமான வளர்ச்சியை பிரதிபலித்தன. அவர்களுக்கு தோல்விகள் இருந்தபோதிலும், தேவனுடைய ராஜ்யத்தின் பிரதேசங்களைப் பாதுகாத்து விரிவுபடுத்தினார்கள். எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தை ஸ்தாபித்ததன் மூலம், தேவன் பூமியில் தம்முடைய ஆட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தேவனுடைய உண்மையான ஆராதனையில் அநேகரை வழிநடத்தும் நிரந்தர வம்சத்தை நிறுவினார். 1 நாளாகமம் 29:23 தாவீதின் சிங்காசனத்தையும் சாலொமோனையும் விவரிக்கிற விதத்தை கவனியுங்கள்:

> அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே, கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்தான் (1 நாளாகமம் 29:23).

தாவீதின் சிங்காசனம் சாதாரண சிங்காசனமாக இருக்கவில்லை என்பதை நாம் இங்கே காண்கிறோம். அது ”கர்த்தருடைய சிங்காசனமாக” இருந்தது. ஆதாமும் ஏவாளும் தேவனுடைய துணை பிரதிநிதிகளாக சேவை செய்ய முதலில் அழைக்கப்பட்டதைப் போலவே, தாவீதின் ராஜ குடும்பமும் தேவனுடைய ராஜ அதிகாரத்தையே பிரதிநிதித்துவப்படுத்தியது.

இதற்கு மேலாக, தாவீதின் வீட்டாரும் ராஜரீக ஆசாரியத்துவத்தை கொண்டிருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களை தேவனுடைய ஆராதனையில் வழிநடத்திய ஆசாரியர்கள் மற்றும் லேவியரின் சேவைகளை தாவீதும் சாலொமோனும் ஏற்பாடு செய்து மேற்பார்வையிட்டனர். தாவீது எருசலேமில் தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட சாலொமோனை ஆயத்தம்பண்ணினான். தாவீது எருசலேமுக்குக் கொண்டுவந்த உடன்படிக்கைப் பெட்டியை சாலொமோன் ஆலயத்தில் வைத்தான். மற்றும் தாவீதின் படி, இந்த உடன்படிக்கைப் பெட்டி பூமியில் தேவனுடைய பாதபடியாக இருந்தது. 1 நாளாகமம் 28:2 இல் தாவீது இவ்வாறு அறிவிக்கிறார்:

> கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன் (1 நாளாகமம் 28:2).

ஏசாயா 66:1 நமக்குச் சொல்லுகிறபடி, தேவனுடைய சிங்காசனம் பரலோகத்தில் இருந்தது, ஆனால் அவருடைய பாதங்கள் பூமியைத் தொட்ட அவருடைய சிங்காசனத்தின் பாதபடி ஆலயத்தில் உடன்படிக்கைப் பெட்டியாக இருந்தது. ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தோன்றியதைப் போலவே, தேவனுடைய காணக்கூடிய மகிமை ஆலயத்தை நிரப்பியது. எருசலேமின் ஆலயம் பூமியில் தேவனுடைய அரசாட்சியின் மையமாக மாறியது.

எனவே, தாவீது மற்றும் சாலொமோனின் காலத்தில், இஸ்ரவேலர் ஆபிரகாமின் நாட்களில் புலம்பெயர்ந்த கோத்திரத்திலிருந்து, எகப்திலிருந்து வெளியேறியதன் மூலமும் கானானை சுதந்தரித்ததன் மூலமும் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு தேசமாக மாறி எருசலேம் நகரத்தில் ஒரு ராஜாவைக் கொண்ட பேரரசை கொண்டவர்களாகவும் ஒரு ஆலயத்தை கொண்டவர்களாகவும் வளர்ந்திருந்ததை நாம் காண்கிறோம். ஆனால் இஸ்ரவேலை இந்தக் கட்டத்திற்குக் கொண்டுவருவதில் தேவனுடைய நோக்கம் என்ன? இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் மகத்தான இலக்கு என்ன? சங்கீதம் 72:1-17 இல், தாவீதின் வீட்டாரின் ஆட்சியின் கீழ் இஸ்ரவேலின் மகிமையான முடிவை சங்கீதக்காரன் இவ்வாறு விவரித்தான்:

> தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும்! … ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்! … சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்! … அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்; சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும்! மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்! (சங்கீதம் 72:1-17).

இந்த வேத பகுதியில் சங்கீதக்காரன் "ராஜா"க்காகவும் "ராஜ குமாரனுக்காகவும்" ஜெபம் செய்தான். தாவீதின் வம்சம் "நீதி" மற்றும் "நியாயம்" ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் என்று அவன் ஜெபித்தான். ஆனால் தாவீதின் ஆட்சி பூமி முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் அவன் ஜெபித்தான் - "நதியிலிருந்து பூமியின் எல்லைகள் வரைக்கும்" "சமுத்திரத்திலிருந்து சமுத்திரம் வரைக்கும்" அவர் அரசாளுவார். "எல்லா ராஜாக்களும்" இஸ்ரவேலின் ராஜாவுக்கு முன்பாக மண்டியிட்டு அவரைச் சேவிப்பார்கள் என்று அவர் ஜெபித்தார். ராஜாவின் "நாமம்" "என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" என்றும் "அவருடைய புகழ்" "சூரியனைப்போல் நீடிக்கும்" என்றும் அவர் ஜெபித்தார். அப்படியானால், 17-ம் வசனத்தில், சங்கீதக்காரன் தாவீதின் வம்சத்தைப் பற்றி மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்! என்கிற இந்த வார்த்தைகளை எழுதியதில் ஆச்சரியமில்லை.

ஆதியாகமம் 12:3 இல் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் குறிப்பான ஆபிரகாம் பூமியின் எல்லாக் குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பார் என்பது வெளிப்படையானது. ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேர்ந்தெடுப்பதற்கான தேவனுடைய நோக்கம் தாவீதின் வீட்டார் தேவனுடைய ஆசீர்வாதத்தை எல்லா தேசங்களுக்கும் பரப்பும்போது இறுதியாக நிறைவேறும். அப்பொழுது உண்மையுள்ளவர்கள் நீதியைப் பெறுவார்கள், செழிப்பும் சமாதானமும் பூமியெங்கும் பெருகும். எதிர்காலத்தைப் பற்றிய இந்த சித்திரத்தை மனதில் கொண்டு, சங்கீதக்காரன் 19-ம் வசனத்தில் தேவனுக்கு இந்த மகத்தான துதியை செலுத்தி முடிக்கிறான்:

> அவருடைய [தேவனுடைய] மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்! (சங்கீதம் 72:19).

சங்கீதம் 72:19 பிதாக்களின் வாக்குத்தத்தங்கள் துவங்கி, எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் வெளியேறி கானானை சுதந்தரித்து பேரரசாக உருவானது வரையான இஸ்ரவேலில் நடந்த அனைத்து வளர்ச்சிகளுக்குமான இலக்கை வெளிப்படுத்துகிறது. ராஜ்யத்தின் இந்த நிலைகள் அனைத்தும் தேவனுடைய மகிமையால் முழு பூமியையும் நிரப்பும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. தேவனுடைய ராஜ்யம் தாவீதினுடைய வீட்டின் ஆட்சியின் மூலம் இஸ்ரவேலின் எல்லைகளிலிருந்து பூமியின் எல்லைகள் வரை பரவியது போல, தேவனுடைய மகிமையான பிரசன்னம் பரலோகத்தை நிரப்புவது போலவே முழு உலகத்தையும் நிரப்பும்.

> ஒரு நாள் முழு பூமியும் தேவனுடைய பிரகாசத்தால் நிரப்பப்படும். அது ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அதை நிரப்பும், அதனால், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் குறியீட்டு கற்பனையின்படி, தேவனுடைய மகிமை ஒளிர்வதால் ஒரு சூரியன் கூட இருக்க வேண்டிய அவசியமில்லை, அது பிரபஞ்சம் முழுவதும் கதிர்வீசும். ஆதியாகமம் 1-ல் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தத் திட்டத்தை நாம் காண்கிறோம், அங்கு தேவன் தம்முடைய சாயலில் மனிதனையும் ஸ்திரீயையும் சிருஷ்டிக்கிறார், பின்பு பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தும்படி அவர்களிடம் சொல்கிறார், ஆதியாகமம் 1 லேயே இதை சொல்கிறார், தேவனுடைய திட்டம் வெறுமனே தோட்டத்தை நிரப்புவது மட்டுமல்ல, அவருடைய சாயலைக் கொண்டு முழு பூமியையும் நிரப்புவதாகும் என்பதை நமக்குக் காட்டுகிறது. அவருடைய மகிமையை அவருக்குத் திரும்பவும் பிரதிபலிக்கிற ஆராதிக்கிற சாயலாக இருக்கிறது.
>
> – Dr. ஸ்காட் ரெட்

இதுவரை, பழைய ஏற்பாடு பரந்த மற்றும் குறுகிய அர்த்தங்களில் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி எவ்வாறு பேசுகிறது என்பதையும், ஆரம்பகால வரலாறு மற்றும் இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றின் போது தேவனுடைய ராஜ்யம் எவ்வாறு வளர்ந்தது என்பதையும் நாம் பார்த்தோம். இப்போது நாம் நமது கடைசித் தலைப்பான 'புதிய ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் நிறைவேற்றத்திற்கு' திரும்புவோம்.

# புதிய ஏற்பாடு

இயேசுவினுடைய ஊழியத்தின் இருதயமும் முழு புதிய ஏற்பாட்டின் இருதயமும் சுவிசேஷமாகும் என்பதே எல்லா கிறிஸ்தவர்களும் உறுதிப்படுத்த வேண்டிய ஒரு விஷயமாகும். இயேசுவின் ஊழியத்தின் இருதயமும் முழு புதிய ஏற்பாட்டின் இருதயமும், சுவிசேஷமாகும். கிறிஸ்தவ சுவிசேஷத்தின் பிரகடனம், அல்லது "நற்செய்தி", நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக இருக்கிறது. நம்மில் பெரும்பாலானோர் இதை ஏற்றுக் கொண்டிருந்தாலும், கிறிஸ்தவ நற்செய்தி பழைய ஏற்பாட்டில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கிறது என்பதை நாம் அடிக்கடி சிந்திப்பதில்லை. கிறிஸ்தவ விசுவாசத்தின் நற்செய்தி என்பது, இயேசு கடந்த காலத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் தோல்விகளை வென்று, தேவனுடைய வெற்றிகரமான ஆட்சியை உலகத்தின் எல்லைகளுக்கு பரப்புவதில் வெற்றி பெறுகிறார் என்ற பிரகடனமாகும். இதுதான் நாம் நம்பும் நற்செய்தியாகும். இது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியாகும்.

மத்தேயு இயேசுவின் பிரசங்கத்தை மத்தேயு 4:23 இல் சுருக்கமாகக் கூறிய விதத்தைக் கவனியுங்கள்:

> பின்பு, [இயேசு] கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் (மத்தேயு 4:23).

நாம் இங்கே பார்க்கிறபடி, இயேசு "சுவிசேஷத்தை" அல்லது நற்செய்தியைப் பிரசங்கித்தார். ஆனால் இந்த நல்ல செய்தி எதைப் பற்றியது? அது "ராஜ்யத்தைப்" பற்றிய நற்செய்தியாக இருந்தது. தேவனுடைய மகிமையான ராஜ்யம் பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமிக்கு வருவதற்கான பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகள் அனைத்தையும் கிறிஸ்து நிறைவேற்றுகிறார் என்பதே நாம் விசுவாசித்து மற்றவர்களுக்கு அறிவிக்கும் நற்செய்தியாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பற்றியோ, அல்லது தேவனுடைய ஆட்சியின் நற்செய்தியைப் பற்றியோ நாம் பேசும்போது, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பை மட்டுமே கொண்டிருந்த ஆரம்பகால விசுவாசிகள் என்ன நினைத்திருப்பார்கள் என்பதைப் பற்றி சிந்திக்க அது நமக்கு உதவுகிறது. ஏசாயா 52 தேவன் தனது மக்களை மீட்கப் போகிறார் என்று அறிவிக்கிறது, அவர் இவ்வாறு கூறுகிறார் ... ”நற்செய்தியைக் கொண்டுவருகிறவர்களின் பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகானவைகள்... சீயோனை நோக்கி: ”உன் தேவன் ராஜ்யபாரம்பண்ணுகிறார்” என்றார். அது சமாதானத்தின் நல்ல செய்தி என்று கூறப்படுகிறது, எனவே அது தேவனுடைய சமாதானத்தின் நல்ல செய்தியாகும், அது தேவனுடைய ஆட்சியின் நல்ல செய்தியாகும், அது தேவன் தனது மக்களை காப்பாற்றுகிறார் என்ற நல்ல செய்தியாகும், தேவன் உலகில் நீதியையும் நியாயத்தையும் கொண்டுவர தனது மக்கள் சார்பாக செயல்படுகிறார் என்று அர்த்தமாகும் ... ஆனால், ஏற்கனவே, இயேசு முதல் முறையாக வந்தபோது, அவர் அந்த ஒரு மாதிரியை நமக்கு கொடுத்தார், அவர் மக்களைக் குணமாக்கி, தம்முடைய அற்புதமான கிரியைகளைச் செய்துகொண்டிருந்தது ஒரு முன்னறிவிப்பாகும். நாம் அதன் முழுமையில் ராஜ்யத்தில் இன்னும் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற முன்னறிவிப்பாக அவைகள் இருந்தன.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்

வேதாகம வரலாற்றின் மற்ற கட்டங்களையும் நாம் ஆராய்ந்ததைப் போல, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தை ஆராய்வோம். தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன சொல்கிறது என்பதை முதலில் பார்ப்போம். இரண்டாவதாக, ராஜ்யத்தின் மக்களைப் பற்றி நாம் பேசுவோம். மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ராஜ்யத்தின் வளர்ச்சியைப் பற்றிப் பார்ப்போம். தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## இடம்

வருத்தப்படும் விதமாக, கிறிஸ்துவின் நல்ல அர்த்தமுள்ள சீஷர்கள் பலர், புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கும் பூமியிலுள்ள தேவனுடைய ராஜ்யத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நம்புகிறார்கள். பழைய ஏற்பாடு பௌதிக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உலகத்தை நோக்கியதாக இருந்தது என்று நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம், ஆனால் புதிய ஏற்பாட்டு விசுவாசமானது பொருளற்ற பரலோக உண்மைகளையும் உள்ளார்ந்த ஆவிக்குரிய காரியங்களையும் நோக்கியதாக இருக்கிறது. இப்போது, இது உண்மையாக இருப்பதற்கான வழிகள் உள்ளன. கிறிஸ்துவின் சீஷர்கள் பூமிக்குரிய குடியுரிமையைக் கொண்டிராமல் பரலோகத்தில் தங்கள் குடியுரிமையைக் கொண்டுள்ளனர், ஏனென்றால் இந்த நேரத்தில், நமது ராஜாவாகிய இயேசு பிதாவின் வலதுபாரிசத்தில் பரலோகத்தில் இருக்கிறார். நாம் உள்ளான ஆவிக்குரிய காரியங்களிலும் கவனம் செலுத்துகிறோம், ஏனென்றால், இந்த நேரத்தில், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சரீரங்கள் சீர்கெட்டால் கூட, நம்மை உள்ளுக்குள் புதுப்பிக்கிறார். இப்போது நாம் இந்த இடத்தில் கவனமாக இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டின் விசுவாசம் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பூமிக்குரிய ராஜ்ய நோக்கங்களிலிருந்து பிரிக்கப்படவில்லை. மாறாக, புதிய ஏற்பாட்டு விசுவாசம், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் கடைசிக் கட்டத்தை இயேசு நிறைவேற்றுகிறார் என்று பிரகடனப்படுத்துகிறது. சமாதானம், சந்தோஷம், நற்குணம் ஆகியவற்றின் இந்த ராஜ்யத்தை அவர் பூமியின் எல்லைகள்மட்டும் பரப்புகிறார்.

பல விதங்களில், புதிய ஏற்பாடானது, பழைய ஏற்பாட்டில் நாம் காண்பது போல, தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தை நோக்கிய அதே நோக்குநிலையைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, கிறிஸ்துவின் ராஜ்ய வேலை தேவனுடைய ஆட்சியின் புவியியல் மையமான இஸ்ரவேல் தேசத்தில் தொடங்கியது என்பதைக் குறிக்கிறது. இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் ராஜ்யபாரம் பூமியின் எல்லைகள் வரைக்கும் பூகோளரீதியாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற தேவனுடைய அழைப்பை கிறிஸ்து எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதையும் வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் புவியியல் மையத்தை முதலில் பார்ப்போம்.

## மையம்

ஆரம்பகால வரலாற்றின்போது, ஏதேனும் அதன் பரிசுத்த தோட்டமும் தேவனுடைய ராஜ்யத்தின் புவியியல் மையமாக இருந்தன. அங்கிருந்து, மனிதகுலம் தேவனுடைய ஆட்சியை பூமியின் எல்லைகள் வரை நீட்டிக்க வேண்டியிருந்தது. பின்னர், வாக்குத்தத்த தேசமான இஸ்ரவேல் தேசத்தில் தேவன் தம்முடைய ராஜ்யத்தைக் கட்டினார். அங்கிருந்து அவர்கள் பூமியின் கடைசி பரியந்தம் அவருடைய ராஜ்யத்தைப் பரவச் செய்ய வேண்டியதாக இருந்தது. பூமியில் தேவனுடைய ஆட்சியின் இந்த மையம் பழைய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமானது, அது இஸ்ரவேலின் மேசியாவாகிய இயேசுவின் வாழ்க்கையிலும் முக்கியமானது என்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படக்கூடாது.

இயேசு தம்முடைய குழந்தைப் பருவத்தில் எகிப்தில் ஒரு குறுகிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். இயேசு இஸ்ரவேல் தேசத்தில் பிறந்தார். அவர் வளர்ந்து, தம்முடைய சீஷர்களை அழைத்து, ஊழியம் செய்து, மரித்து, உயிர்த்தெழுப்பப்பட்டு, அங்கிருந்து பரலோகத்திற்கு ஏறினார். மேலும் பெந்தெகொஸ்தே நாளில், நற்செய்தியைக் கேட்கும்படி நாடுகள் மத்தியில் சிதறி இருந்த பல யூதர்களை இயேசு மீண்டும் வாக்குத்தத்த தேசத்திற்கு கூட்டினார்.

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் இந்த இடம் ஏன் இவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, இயேசு பிறப்பதற்கு முன்பே வாக்குத்தத்த தேசத்தில் என்ன நடந்தது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தாவீது மற்றும் அவனுடைய சந்ததியினரின் ஆட்சியின் கீழ், வாக்குத்தத்த தேசத்தில் இஸ்ரவேலை ஒரு ராஜ்யமாக தேவன் ஸ்தாபித்தார். ஆனால் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் முடிவில், ஒரு பெரிய சோகம் நிகழ்ந்தது. இஸ்ரவேல் ஜனங்களும் அவர்களுடைய ராஜாக்களும் தேவனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள், தேவன் அநேக இஸ்ரவேலர்களை தேசத்திலிருந்து நாடுகடத்தி சிறைப்படுத்தினார். புறஜாதி தேசங்களும், அவர்கள் சேவித்த பொய்யான தெய்வங்களும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் இடிபாடுகளுக்கு நடுவே இன்னும் வாழ்ந்த இஸ்ரவேலரைக் கூட ஆண்டார்கள்.

இயேசு பூமிக்கு வருவதற்கு முன், இஸ்ரவேல் புத்திரர் 500 ஆண்டுகளுக்கும் மேலாக தேவனிடமிருந்து இந்த நியாயத்தீர்ப்பின் கீழ் பாடுபட்டார்கள். இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போதுகூட, வாக்குத்தத்த தேசம் ரோம சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் கீழ் இருந்தது. தேசம் பாவத்தினாலும் இருளினாலும் நிறைந்திருந்தது. அது தீய ஆவிகளால் நிரம்பி வழிந்தது. ஆனால், இந்தக் கொடிய சூழ்நிலைகளை மாற்றியமைக்கவும், தேவனுடைய ராஜ்யத்தின் இறுதிக் கட்டங்களை பூமிக்குக் கொண்டுவரவும் இயேசு வந்தார். நாசரேத்தில் உள்ள ஜெப ஆலயத்தில் இயேசுவின் ஆரம்பகால பிரசங்கங்களில் ஒன்றைப் பற்றி லூக்கா 4:17-19 இல் லூக்காவின் பதிவை கவனியுங்கள்:

> அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது: ”கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்” (லூக்கா 4:17-19).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய ராஜ்ய நோக்கங்களின் இறுதி வெற்றிக்கான பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகளை இயேசு இங்கே குறிப்பிட்டார். ஏசாயா 61 இல் இருக்கிற இந்த தீர்க்கதரிசனம் இஸ்ரவேலரின் சிறையிருப்பு ஒரு முடிவுக்கு வந்தவுடன் தேவன் தனது மக்கள் மீது ஆசீர்வாதங்களை ஊற்ற வேண்டும் என்று கணித்தது. சிறையிருப்பின் கீழ் இஸ்ரவேல் ஜனங்கள் அனுபவித்த பயங்கரமான நிலைமைகளை விளக்க இயேசு "தரித்திரர்களையும்," "சிறைப்பட்டவர்களையும்," "குருடர்களையும்" "ஒடுக்கப்பட்டவர்களையும்" குறிப்பிட்டார். ஆனால் சிறையிருப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்தாக ஒருவரை வாக்குத்தத்தம் செய்திருப்பதாக அவர் தம்முடன் இருந்தவர்களுக்கு நினைவூட்டினார். அவர் மீது "கர்த்தருடைய ஆவியானவர்" இருப்பார்; அவரை தேவன் "அபிஷேகம்" செய்தார். இந்த அபிஷேகஞ்செய்யப்பட்டவர், மேசியா ராஜா ஆவார், "கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தை" அறிவிப்பார் அல்லது தம்முடைய ஜனங்களுக்குக் கிருபை செய்வார். "நற்செய்தியை", அல்லது சுவிசேஷத்தை", "தரித்திரருக்கு" பிரசங்கிப்பார், "சிறைப்பட்டவர்களுக்குச் சுதந்தரத்தை" பிரசங்கிப்பார், குருடர்களுக்கு "பார்வையின் மீட்பை" அருளுவார், "ஒடுக்கப்பட்டவர்களை விடுதலையாக்குவார்." இந்த நம்பிக்கையான வார்த்தைகளை வாசித்த பிறகு, லூக்கா 4:20-21 இல் இயேசு செய்ததை இப்போது கவனியுங்கள்:

> [இயேசு] வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" என்றார் (லூக்கா 4:20-21).

இஸ்ரவேலின் சிறையிருப்பை முடிவுக்குக் கொண்டுவரவும், தேவனுடைய ஆசீர்வாதங்களை தம்முடைய ஜனங்களுக்குக் கொண்டுவரவும் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டவர் தாம்தான் என்று இயேசு தைரியமாக பிரகடனம் செய்தார். அதனால்தான் புதிய ஏற்பாடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இயேசு என்ன செய்தார் என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது. பூமியிலுள்ள தேவனுடைய ராஜ்யத்தின் புவியியல் மையத்தில் உள்ள ஆபிரகாமின் உண்மையுள்ள பிள்ளைகளில் மீதியானவர்களை மீட்பதற்காக அவர் முதலில் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தார்.

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தின் புவியியல் மையம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தின் இறுதியான, முற்றிலும் வெற்றிகரமான, பூமியின் எல்லா பகுதிகளுக்குமான புவியியல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விரிவாக்கம் இயேசுவின் முதல் வருகையால் அமைக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்வதும் முக்கியமாகும்.

## விரிவடைதல்

நாம் முன்பே குறிப்பிட்டபடி, மத்தேயு 6:10 இல் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தேவனுடைய ராஜ்யம் உலகம் முழுவதும் விரிவடைய ஜெபிக்கும்படி கற்றுக்கொடுத்தார்:

> உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத்தேயு 6:10).

தம்முடைய ஊழியம் முழுவதிலும், இயேசு தம்முடைய சீஷர்களின் கண்களை இந்த உலகளாவிய இலக்கின் மீது ஒருமுகப்படுத்தினார். மத்தேயு 24:14 இல் நாம் வாசிக்கையில், இயேசு தம்முடைய சீஷர்களிடம் பின்வருமாறு சொன்னார்:

> ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத்தேயு 24:14).

தேவனுடைய ராஜ்யத்தின் வருகையைப் பற்றிய சுவிசேஷ செய்தியானது உலகம் முழுவதும் பரவுவதாக இருந்தது, பின்னர் இயேசு திரும்பி வருவார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து உலகத்தின் எல்லா தேசங்களுக்கும் தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்புவதற்கு இயேசுவும் அவருடைய முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதை புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது.

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தின் இடத்தை நோக்கிய இந்த நோக்குநிலையை மனதில் கொண்டு, புதிய ஏற்பாட்டில் உள்ள ராஜ்யத்தின் மக்கள் மீது நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## மக்கள்

ஆரம்பத்தில், மனிதர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். தேவன் இஸ்ரவேலரை விசேஷித்த விதத்தில் இந்தப் பணிக்கு வரவழைத்து, இந்த அழைப்பை நிறைவேற்றுவதில் இஸ்ரவேல் தேசத்தை வழிநடத்த தாவீதின் வம்சத்தாரை நியமித்தார். ஆனால், நாம் முன்பு குறிப்பிட்டபடி, பழைய ஏற்பாட்டு வரலாற்றின் முடிவில், தாவீதின் வீட்டாரும் இஸ்ரவேல் ஜனங்களும் இந்த அழைப்பை நிறைவேற்றாததால், தேவன் அவர்களை சிறையிருப்பின் பயங்கரங்களால் சபித்தார். மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சத்துருக்களின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் பாடுபட்டார்கள்.

ஆகவே, இயேசுவும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் "சுவிசேஷத்தைப்" பற்றியோ அல்லது நற்செய்தியைப் பற்றியோ பேசியதில் ஆச்சரியமில்லை. மனித இனத்திற்கான தேவனுடைய அசல் வடிவமைப்பு இயேசுவால் நிறைவேற்றப்படப்போகிறது என்ற நற்செய்தியை அவர்கள் பிரகடனம் செய்தார்கள். இயேசு தேவனுடைய எதிரிகளைத் தோற்கடித்து, பூமியெங்கும் தேவனுடைய ஜனங்களை ஆசீர்வதிப்பார்.

புதிய ஏற்பாடு தேவனுடைய ராஜ்யத்தின் மக்கள் மீது எவ்வாறு கவனத்தை ஈர்க்கிறது என்பதைப் புரிந்துகொள்ள, நாம் இரண்டு விஷயங்களைப் பற்றிப் பாரப்போம்: முதலாவதாக, கிறிஸ்து உன்னதமான, பரிபூரண நீதியுள்ள தேவனுடைய சாயலாக சேவை செய்தல்; இரண்டாவதாக, விசுவாசிகள் தேவனுடைய புதுப்பிக்கப்பட்ட சாயல்களாக தேவனுக்கு சேவை செய்தல். முதலில் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவையை தேவனுடைய உன்னத சாயலாகக் கருதுவோம்.

## கிறிஸ்து

பல வட்டாரங்களில், திரித்துவத்தின் இரண்டாவது நபரான நித்திய வார்த்தையானது ஏன் மாம்சமாக மாறினார் என்பதைப் பற்றி கிறிஸ்தவர்களுக்கு சிறிய விழிப்புணர்வு உள்ளது. இயேசு முழுமையாக தேவனாகவும், முழுமையாக மனிதனாகவும் இருக்கிறார் என்பதை நாம் சரியாக உறுதிப்படுத்துகிறோம், ஆனால் நாம் பெரும்பாலும் கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தின் மீது கிட்டத்தட்ட முழுமையாக கவனம் செலுத்துகிறோம். இதன் விளைவாக இன்று நித்திய திரித்துவத்தின் இரண்டாவது நபர் ஏன் நம்மில் ஒருவராக ஆனார் என்பதை வெளிப்படுத்துவது பெரும்பாலும் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு கடினமாக இருக்கிறது. மனித அவதாரம் ஏன் அவசியப்பட்டது? ஆரம்பத்தில் இருந்தே தேவன் தம்முடைய சாயலுக்காக நியமித்திருந்த முக்கியமான பாத்திரத்தை நிறைவேற்ற இயேசு ஒரு மனிதனாக ஆனார் என்கிற புதிய ஏற்பாட்டின் பதில் நேரடியானது.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மனிதத்தன்மையின் இந்த முக்கியத்துவத்தை உயர்த்திக் காட்டும் பல வழிகள் உள்ளன, ஆனால் நாம் அவைகளில் இரண்டை மட்டும் பார்ப்போம்: முதலாவதாக, இயேசு கடைசி ஆதாம் என்கிற புதிய ஏற்பாட்டு போதனை; இரண்டாவதாக, இயேசு தாவீதின் வீட்டிலிருந்து தேவனுடைய ஆசாரியராகவும் ராஜாவாகவும் இருக்கிறார் என்ற உண்மை. எனவே, புதிய ஏற்பாட்டில் இயேசுவே கடைசி ஆதாம் என்பதன் அர்த்தம் என்ன?

**கடைசி ஆதாம்.** அப்போஸ்தலனாகிய பவுல் ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு ஒற்றுமையை வரைந்தார் என்பதை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேதாகமத்தின் ஒவ்வொரு மாணவர்களும் அறிவார்கள். ரோமர் 5:12-21 மற்றும் பிற பகுதிகளில், ஆதாமின் பாவம் தேவனுடைய பார்வையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பவுல் கற்பித்தார், அதனால் அவர் மனித இனத்தை பயனற்றபடி இருக்கவும் நித்திய நியாயத்தீர்ப்படையவும் செய்தார். ஆனால், பவுல் விளக்கியபடி, சிலுவையில் தம்முடைய பாடுகளாலும் மரணத்தினாலும் இயேசு தேவனுக்குப் பரிபூரணமாக கீழ்ப்படிந்ததன் காரணமாக தேவனுடைய பார்வையில் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது, அதனால் அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொண்டுவந்தார். 1 கொரிந்தியர் 15:21-22 யை கவனியுங்கள். அங்கே பவுல் இயேசுவின் மனிதத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய விதத்தைக் கவனியுங்கள். பவுல் எழுதினார்:

> மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:21-22).

இரட்சிப்பை தேவனுடைய கிருபையின் ஒரு இலவச பரிசாக நினைத்து நாம் மிகவும் பழக்கப்பட்டிருக்கிறோம்,: ஒரு மனுஷனால் மரணம் உண்டானதுபோல, *தேவனுடைய கிருபையினாலே* மரித்தோருடைய உயிர்த்தெழுதலும் வந்திருக்கிறது என்று பவுல் இப்படி ஏதாவது எழுதுவார் என்பதை நம்மில் பலர் எதிர்பார்த்திருக்கலாம் . இப்போது, கிறிஸ்துவுக்குள் இருக்கிற இரட்சிப்பு தேவனுடைய கிருபையாய் இருப்பதால் இது நிச்சயமாக உண்மையாக இருக்கும். ஆனால் *இங்கே* அப்போஸ்தலன் வலியுறுத்தியது அதுவல்ல.

மாறாக, மரணம் ஆதாம் என்கிற ஒரு மனிதன் மூலம் வந்தது போலவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலும், இரட்சிப்பின் குறிக்கோளும், கிறிஸ்து என்கிற ஒரு மனிதன் மூலம் வருகிறது. முதல் மனிதனாக, தேவனுடைய முதல் சாயலாக, ஆதாம் தேவனுடைய ராஜ்ய நோக்கங்களுக்காக சேவை செய்யத் தவறி, நம் அனைவருக்கும் மரணத்தைக் கொண்டுவந்தான். ஆனால் தேவன் தம்முடைய ராஜ்யம் மனுஷர்கள் மூலமாக பூமிக்கு வரும் என்ற அவருடைய கட்டளையை ஒருபோதும் புரட்டிப் போட்டதில்லை. எனவே, ஆதாம் செய்யத் தவறியதை நிறைவேற்ற நீதியுள்ள, பரிபூரணமான கீழ்ப்படிதலுள்ள தேவனுடைய சாயலாக உள்ள ஒரு *மனிதன்* அவசியப்பட்டான். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, தேவனுடைய உண்மையுள்ள மக்கள் அப்படிப்பட்ட ஒரு மனிதனுக்காக ஜெபித்தார்கள். கிறிஸ்து இரட்சிப்பைக் கொண்டுவருகிற நீதியுள்ள மனுஷனாகவும், அவரை விசுவாசிக்கிற யாவருக்கும் தேவனுடைய ராஜ்யத்தில் உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவனைக் கொண்டுவருகிறவராகவும் இருக்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இயேசு தேவனின் பரிபூரண சாயலாக இருக்கிறார். 1 கொரிந்தியர் 15:45 இல் நாம் வாசிக்கிறபடி, இயேசு இரண்டாவது ஆதாமும் தேவனுடைய வல்லமையாக இருக்கக்கூடிய ”கடைசி ஆதாமாகவும்” இருக்கிறார். தேவனுடைய அசாதாரண வல்லமை இயேசுவின் பரிபூரணத்தில் நிரூபிக்கப்பட்டது, ஏனென்றால் அவர் பாவம் செய்யாத ஒரு மனிதராகவும், பாவத்தில் பிறக்காத ஒரு மனிதராகவும் இருந்தார். மத்தேயு 1:19-20 யை நாம் பார்த்தால், இயேசுவின் ஆவி யோசேப்பிலிருந்தோ, மரியாளிடமிருந்தோ அல்லது ஆதாமின் வம்சாவளியினிடமிருந்தோ வரவில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது என்பதைக் காண்கிறோம். எனவே, அவரது வாழ்க்கை உள்ளத்தில் பரிபூரணமாக இருந்த ஒரு வாழ்க்கையாகும்; அவர் மாமசத்திலும் இரத்தத்திலும் இருந்தாலும் அவருடைய பரிசுத்தம் உள்ளுக்குள் பரிபூரணமாயிருந்தது.
>
> – யோகாநேஸ் பிரெப்டோவார்சோ, Ph.D.

இப்போது இயேசு கடைசி ஆதாமாக இருப்பதைத் தவிர, ராஜ்யத்தின் கடைசி கட்டங்களில் தேவனுடைய ஆசாரியராகவும் ராஜாவாகவும் சேவை செய்கிறார் என்பதையும் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது.

***ஆசாரியனும் ராஜாவும்.*** ஆதாமும் ஏவாளும் முதன்முதலில் தேவனுக்கு ராஜரீக ஆசாரியர்களாக சேவை செய்ததை நீங்கள் நினைவுகூறலாம். தேவன் இஸ்ரவேல் தேசத்தை ஆசாரிய ராஜ்யமாக அவருக்கு ஊழியஞ்செய்து முழு மனித இனத்தையும் வழிநடத்தும்படி அழைத்தார். இஸ்ரவேலர் ஒரு பெரிய ராஜ்யமாக வளர்ந்தபோது, தேவன் ஆசாரியர்களையும் ராஜாக்களையும், குறிப்பாக தாவீதும் அவருடைய வம்சத்தையும் தம்முடைய ராஜரீக ஆசாரியர்களாகச் சேவிக்க அபிஷேகம் செய்தார் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். அதனால்தான் எபிரெய எழுத்தாளர் கிறிஸ்துவின் ராஜரீக ஆசாரியத்துவத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். அவர் எபிரெயர் 4:14 இல் இவ்வாறு எழுதினார்:

> வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம் (எபிரெயர் 4:14).

இயேசு சிலுவையில் மரித்தபோது பாவத்திற்கான இறுதி பலியாக தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் தன்னை விசுவாசிக்கிற யாவர் சார்பாகவும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை தன்மேல் எடுத்துக்கொண்டார்.

இது தவிர, தாவீதின் வீட்டில் நீதியுள்ள அபிஷேகஞ்செய்யப்பட்ட இயேசு தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் வீற்றிருக்கிறார் என்பதையும் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. லூக்கா 1:32-33 இல் மரியாளுக்கு இயேசு பிறந்ததை காபிரியேல் தூதன் அறிவித்த விதத்தை கவனியுங்கள்:

> [இயேசு] பெரியவர், உன்னதமானவரின் குமாரன் என்று அழைக்கப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார், அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது (லூக்கா 1:32-33).

கிறிஸ்து தாவீதின் வம்சத்தாரின் ராஜரீக ஆசாரியத்துவத்தை பரிபூரணமாக நிறைவேற்றியதால், அவருடைய தலைமையின் கீழ் தேவனுடைய ராஜ்யம் ஒருபோதும் முடிவடையாது. தேவனுடைய ராஜ்ய நோக்கங்கள் இயேசுவின் ஆட்சியின் மூலம் நிறைவேறும்.

புதிய ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் ஜனங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, ஆதாமுக்கும் இஸ்ரவேலுக்கும் தாவீதின் வீட்டாருக்கும் தேவன் கொடுத்த சேவையை நிறைவேற்றுகிற தேவனுடைய உன்னதமான சாயலாக கிறிஸ்து இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உண்மையான விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறார்கள் என்றும் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது, இதனால் சபை இப்போது தேவனுடைய ராஜ்யத்தின் மக்களாகவும் சேவை செய்கிறது.

## விசுவாசிகள்

புதிய ஏற்பாட்டு காலத்தின் ஆரம்பத்தில், கிறிஸ்தவ சபை கிட்டத்தட்ட பிரத்தியேகமாக யூத மக்களைக் கொண்டிருந்தது. அவர்கள் மனந்திரும்பி இயேசுவை கிறிஸ்துவாக விசுவாசித்த ஆபிரகாமின் வம்சாவளி ஆவார்கள். இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் யூதராக இருந்தார்கள், பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசித்த ஒவ்வொருவரும் யூதர்களாயிருந்தார்கள். புதிய ஏற்பாட்டு யுகத்தின் இந்த ஆரம்ப நாட்களில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வாழ்ந்தவர்களிடமிருந்தும் புறஜாதியாருக்குள்ளே சிதறிக்கிடந்தவர்களிடமிருந்தும் யூதர்களில் உண்மையுள்ள மீதியானவர்களை தேவன் சேகரித்தார்.

ஆனால் மிகவும் ஆச்சரியமான ஒன்று நடப்பதற்கு நீண்ட காலம் ஆகவில்லை. ஆபிரகாமும் அவனுடைய சந்ததியும் புறஜாதிகளை அதிக எண்ணிக்கையில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவருவதன் மூலம் தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பரப்புவார்கள் என்ற தம்முடைய வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றத் தொடங்கினார். இதனால்தான் புதிய ஏற்பாடு புறஜாதி விசுவாசிகள் உட்பட கிறிஸ்துவின்

சீஷர்கள் அனைவரையும் தேவனுடைய புதுப்பிக்கப்பட்ட சாயல்களாக பேசுகிறது. எபேசியர் 4:24 இல் பவுல் விளக்கியபடி, விசுவாசிகள் பின்வருமாறு இருக்க வேண்டும்:

> மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:24).

அதனால்தான், 1 பேதுரு 2:9 இல், பேதுரு புதிய ஏற்பாட்டு சபையை - யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருவரையும் உள்ளடக்கிய - தேவனுடைய ராஜரீக ஆசாரியக்கூட்டம் என்று விவரித்தார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9).

இங்கே பேதுரு யாத்திராகமம் 19:6 யைக் குறிப்பிடுகிறார், அங்கு தேவன் முதலில் இஸ்ரவேல் தேசத்தைத் தம்முடைய ”ராஜரீக ஆசாரியர்கள்” என்று அழைத்தார். ஆனால் பேதுரு இந்த வார்த்தைகளை சபையில் உள்ள யூதர்கள் மற்றும் புறஜாதியார் இருவரையும் குறிப்பிட பயன்படுத்தினார்.

பூமியிலுள்ள ஒவ்வொரு இனத்திலிருந்தும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆபிரகாமின் குடும்பத்தினராக ஆகிறார்கள், இதனால் முழு கிறிஸ்தவ சபையும் ”தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு இனமாகவும், ஒரு ராஜரீக ஆசாரியக்கூட்டமாகவும், ஒரு பரிசுத்த தேசமாகவும், தேவனுடைய சொந்த ஜனமாகவும்” இருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் உலகத்தில் தேவனுடைய ராஜரீக ஆசாரியர்களாக சேவை செய்கிறார்கள். நாம் ”கிறிஸ்துவின் மகிமைகளைப் பிரகடனப்படுத்துகிறோம்”, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குள் உலகத்தை வழிநடத்துகிறவர்களாக இஸ்ரவேலுக்கு முதலில் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றுகிறோம்.

> 1 பேதுரு 2:8-9 இல், பேதுரு தேவனுடைய ஜனங்களிடம் அவர்கள் யார் என்றும், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்றும் சொல்கிறார், அவர்கள் உண்மையில் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மக்கள்; அவர்கள் தேவனுக்கே உரியவர்கள். ஆனால் அவர்கள் நோக்கம் கொண்ட ஜனங்கள், மற்றும் **அவர்**களா**ல்** உண்மையில் பரிந்து பேச முடியும், அவர்கள் ஆசாரியர்களாக செயல்பட முடியும். அவர்கள் பலி செலுத்தக்கூடிய பழைய ஆசாரியர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> போல் அல்ல. தேவனுடைய ஜனங்களுக்காக பரிந்து பேசுகிறார்கள்... தேவன் நம்மை ஒரு நோக்கத்திற்காக இங்கே வைத்துள்ளார், அதாவது, உண்மையில், பல மக்கள் அவரை அறிந்து அவரை விசுவாசிக்கும் பொருட்டு அவரது மேன்மைகளை அறிவிக்க நம்மை வைத்திருக்கிறார். ஆனால் நாம் வித்தியாசமாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அதாவது, நாம் உண்மையில் பரிசுத்த ஜனங்களாக இருக்கிறோம் ... நாம் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
>
> – Dr. உயானி சிண்டோ

இப்போது நாம் புதிய ஏற்பாட்டு யுகத்தில் ராஜ்யத்தின் இடத்தைப் பற்றியும் ஜனங்களைப் பற்றியும் பார்த்திருக்கிறோம், புதிய ஏற்பாட்டில் ராஜ்யத்தின் முன்னேற்றத்தைக் குறித்து நாம் பார்க்க வேண்டும்.

## முன்னேற்றம்

பல வழிகளில் பார்க்கும் போது, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த முன்னேற்றம் வேதாகமத்தில் நாம் காணும் மிகத் தீவிரமான போதனைகளில் ஒன்றாகும். முதல் நூற்றாண்டில் யூதர்களில் பெரும்பான்மையானவர்கள் இயேசுவை மேசியாவாக நிராகரிக்கும் அளவுக்கு அது மிகவும் தீவிரமானதாக இருந்தது. இப்போது, இயேசுவின் நாளில் யூதர்கள் மத்தியில் பல பிரிவுகள் இருந்தன. எருசலேமில் அதிகாரத்தில் இருந்த பரிசேயர்களையும் சதுசேயரையும், ரோமரையும் வன்முறையால் தூக்கியெறிய முயன்ற செலோத்தேயர்களையும், வாக்குரிமை மறுக்கப்பட்ட பல பாலைவனச் சமூகங்களையும் பற்றி நம்மில் பெரும்பாலோர் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கிடையே பல வேறுபாடுகள் இருந்தபோதிலும், மேசியா சீக்கிரத்தில் தோன்றி, உலகெங்கிலும் தீமையின் மீது தேவனுடைய ராஜ்யத்தின் விரைவான மற்றும் தீர்க்கமான வெற்றியைக் கொண்டுவருவார் என்று அவர்கள் அனைவரும் நம்பினார்கள். ஆனால் இயேசுவும் அவருடைய முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் இந்த பரவலான எதிர்பார்ப்பை சவாலுக்கு உட்படுத்தினார்கள். இயேசு அவர்களுக்கு வெளிப்படுத்தும் வரை மறைக்கப்பட்டிருந்த ‘இயேசு மேசியா ஆவார், ஆனால் அவர் தேவனுடைய ராஜ்யத்தை நீண்ட காலத்திற்கு பூமிக்கு கொண்டு வரப்போகிறார்’ என்பதை அவர்கள் அறிவித்தார்கள்.

மத்தேயு 13: 31-32 யையும் இயேசு தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வருகிறது என்பதை எப்படி விளக்கினார் என்பதையும் கவனிக்கவும்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார் (மத்தேயு 13:31-32).

இந்த உவமையில், தேவனுடைய ராஜ்யமானது திடீரென்றும் பேரழிவைக் கொண்டு வருவதாகவும் வராமல், இது ஒரு கடுகு விதை போல சிறியதாக தொடங்கும் என்று அறிவித்தார். ஆனால் காலப்போக்கில், ராஜ்யம் வளர்ந்து ஒரு பெரிய கடுகு செடியைப் போல மாறும் அளவுக்குப் பரவும். புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகள் நமக்குச் சொல்லுகிறபடி, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்துடன் ஒப்பிடும்பொழுது ராஜ்யமானது சிறியதாகவும் அமைதியான வழியிலும் தொடங்கியது. ஆனால் இறுதியில், கிறிஸ்து திரும்பி வரும்போது, அவருடைய ராஜ்யம் முழு பூமியெங்கும் விரிவடையும்.

இந்த போதனைக்கு இணங்க, புதிய ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் முன்னேற்றம் மூன்று முக்கிய கட்டங்களில் விரிவடைகிறதைப் பற்றி நாம் பேசுவோம். முதல் கட்டம் என்பது ராஜ்யத்தின் ஆரம்பமாகும். அது கிறிஸ்து மற்றும் அவரது முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் ஊழியங்களின் போது நடந்தது. ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பு, பூமியில் தேவனுடைய மகிமையான ராஜ்யத்தின் இறுதி வெற்றிக் கட்டத்தை இயேசு தொடங்கி வைத்தார். அதனால்தான், எபேசியர் 2:20 இல், அப்போஸ்தலனாகிய பவுல் சபையைப் பற்றி இவ்வாறு பேசினார்,

> அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் [சபை] கட்டப்பட்டதாயிருக்கிறது; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:20).

கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ராஜ்யத்தின் இரண்டாம் கட்டத்தை ராஜ்யத்தின் தொடர்ச்சி என்று நாம் அழைக்கலாம். தேவனுடைய ராஜ்யம் சபை வரலாறு முழுவதிலும் வளருகிற நீண்ட காலம் இது. இந்தக் காலத்தில், கிறிஸ்து உலகெங்கிலும் சுவிசேஷத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம் தனது ராஜ்யத்தை விரிவுபடுத்துவதைத் தொடர்கிறார். தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்புவதை அவர்களுக்கு மிக உயர்ந்த முன்னுரிமையாக்கும்படி தம்மைப் பின்பற்றுகிறவர்களை அவர் அழைக்கிறார். மத்தேயு 6:33 இல் இயேசு இவ்வாறு அறிவித்தார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33).

நமது வாழ்வின் ஒவ்வொரு நாளும், தேவனுடைய ராஜ்யமான தேவனுடைய நீதியுள்ள ஆட்சியின் விரிவாக்கம் உலகம் முழுவதிலும் பரவ நாம் நாட வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் தேவனுடைய ராஜ்யத்தின் மூன்றாம் கட்டம் ராஜ்யத்தின் எதிர்கால நிறைவாகும். கிறிஸ்து திரும்பிவந்து, முழு உலகத்தையும் தம்முடைய ராஜ்யமாக மாற்றும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிற நேரம் இது. வெளிப்படுத்தின விசேஷம் 11:15 இல் தேவனுடைய ராஜ்யத்தின் இந்தக் கடைசிக் கட்டத்தை யோவான் விவரித்த விதத்தை கவனியுங்கள்:

> ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்" என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின (வெளிப்படுத்தின விசேஷம் 11:15).

கிறிஸ்து பூமிக்குத் திரும்பும்போது, அவர் தேவனுடைய சத்துருக்கள் ஒவ்வொருவரையும் தோற்கடிப்பார், உலகத்தின் ராஜ்யம் தேவனுடைய ராஜ்யமாகவும் அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யமாகவும் மாறும். அந்தக் காலமுதல் "அவர் எல்லா இடங்களிலும், சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்."

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக, ராஜ்யத்தின் தொடக்கத்தில் அவர் நிறைவேற்றிய எல்லாவற்றையும் நாம் திரும்பிப் பார்க்கிறோம். இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஆவி பொழிந்தருளப்படுதல் ஆகியவற்றில் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்கிறோம். ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது கிறிஸ்து என்ன செய்கிறார் என்பதில் நாம் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்கிறோம். பரம் ஏறிய கிறிஸ்துவின் தலைமையின் கீழும், பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழும், சபையானது தேசங்கள் முழுவதிலும் நற்செய்தியை தொடர்ந்து பரப்பி வருகிறது. நிச்சயமாகவே, நாம் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் நிறைவில் அவர் எதிர்காலத்தில் என்ன செய்வார் என்பதில் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்கிறோம். கிறிஸ்து மகிமையில் திரும்பிவந்து, தேவனுடைய மகிமையினால் நிரப்பப்பட்ட புதிய சிருஷ்டியின் நிறைவைக் கொண்டுவருவார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

இந்த பாடத்தில், பழைய ஏற்பாட்டில் தோன்றும் எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும் தேவனுடைய ராஜ்யம் என்கிற கருப்பொருளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். தேவன் எப்போதும் இருந்திருக்கிறார், எப்போதும் வரலாற்றின் மீது அளவிட முடியாத சர்வாதிகாரியாக இருப்பார் என்று பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் பரந்த அர்த்தத்தில் எவ்வாறு விசுவாசித்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். ஆனால் தேவனுடைய கட்டளைகள் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் நடப்பதற்கு, தேவனுடைய ஆட்சி காலப்போக்கில் வெளிப்படும் என்ற குறுகிய அர்த்தத்திலும் அவர்கள் விசுவாசித்தார்கள். வரலாற்றின் இந்த இலக்கை அடைவது ஆரம்பகால வரலாற்றில் தொடங்கியது. இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தில் தேவனுடைய வேளை வரை அது விரிவடைந்தது. புதிய ஏற்பாட்டு யுகத்தில் வரலாற்றின் இந்த இலக்கு கிறிஸ்துவுக்குள் நிறைவேறுகிறது.

பழைய ஏற்பாட்டைப் படித்த அனைவருக்கும் அது குழப்பமாக இருக்கலாம் என்று தெரியும். எனவே, இதன் பெரிய சித்திரத்தை மனதில் வைத்திருப்பது எப்போதும் முக்கியம். பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய பொதுவான நம்பிக்கைகளின் தொகுப்பைப் பகிர்ந்து கொண்டனர், மேலும் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் வளர்க்க தங்கள் புத்தகங்களை எழுதினார்கள். தேவன் தம்முடைய ராஜ்யமாக ஆக உலகத்தை சிருஷ்டித்தார் என்றும், அதைத் தம்முடைய மகிமையினால் நிரப்புவார் என்றும், ஒரு நாள் ஒவ்வொரு சிருஷ்டியும் அவரை என்றென்றுமாக துதிப்பார்கள் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். தேவன் இந்த இலக்கை மனிதர்கள் மற்றும் அவரது சாயல்கள் மூலம் நிறைவேற்றுவார். தீமையிடமிருந்து சவால்கள் வந்தாலும், இந்த ராஜ்யம் தோல்வியடையாது. ஒவ்வொரு திருப்பத்திலும், தேவனுடைய இந்த நோக்கத்தை இயேசுவே நிறைவேற்றுகிறார் என்று பழைய ஏற்பாடு எதிர்பார்க்கிறது. இயேசு தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவருவார். அந்த மகிமையான ராஜ்யத்தில் என்றென்றைக்கும் அவரோடேகூட ராஜ்யபாரம்பண்ணுகிற சந்தோஷத்தை அவர் தம்மேல் விசுவாசமாயிருக்கிற யாவருக்கும் கொடுப்பார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.